# 2011-2015 வரையான காலப்பகுதிக்குரிய வரித்தீர்வையைத் தயாரித்தல் பற்றிய ஆலோசனைப் பத்திரம்

**இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**

# 2011-2015 வரையான காலப்பகுதிக்குரிய வரித்தீர்வையைத் தயாரித்தல் பற்றிய ஆலோசனைப் பத்திரம்

## உள்ளடக்க அட்டவணை


1. முன்னுரை ........................................ 5
2. பகிரங்கக் கருத்துரைகள் வரவேற்றல் ........................................ 6
3. அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் ........................................ 7

3.1 மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறலும் அனுமதிக்கப்பட்ட மின்சார இழப்புகளும் ........................................ 7
3.1.1 அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொகுத்த மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறலும் மின்சார இழப்புகளும் ........................................ 7
3.1.2 சீராக்கப்பட்ட மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறலும் அனுமதிக்கப்பட்ட மின்சார இழப்புகளும் ........................................ 8
3.2 அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவுகளும் செலவினமும் ........................................ 10
3.2.1 இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் கடன் மீள்கட்டமைப்பு ........................................ 10
3.2.2 மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆகுசெலவுகள் ........................................ 10
3.2.3 மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆகுசெலவுகள் ........................................ 16
3.2.4 தனி மின்சார வாங்குநரின் வருமானத் தேவைப்பாடுகள் ........................................ 18
3.2.5 மின்சாரம் அனுப்பவியலாத புதுப்பிக்கத்தகு சக்தி மின்பொறித்தொகுதிகள் ........................................ 19
3.2.6 தனி மின்சார வாங்குநரின் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் ........................................ 20
3.2.7 குறுங்காலக் கடன்கள் தீர்ப்பனவுக்கான ஏற்பாடுகள் ........................................ 21
3.3 அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆகுசெலவுகள் பகுப்பாய்வு ........................................ 22

4. அரசாங்க மானியங்கள் ........................................ 23

4.1 பதிவழிக்கப்பட்டு மீளட்டவணைப்படுத்தப்பட்ட நீண்ட காலக் கடன்கள் ........................................ 23
4.2 எரிபொருள் விலைகள் மீதான சலுகைகள் ........................................ 23

5. வரித்தீர்வை மீள்சமநிலைப்படுத்தல் பற்றிய வழிகாட்டி ........................................ 24

5.1 அறிமுகம் ........................................
5.2 வரித்தீர்வை மறுசீரமைப்புகளுக்கான வழிகாட்டி ........................................ 25
5.3 பாகா வரித்தீர்வைகள் தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட கால இடைவெளிகள் ........................................ 26

6. உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள் ........................................ 26

6.1 வீதி ஒளியேற்றல் ஆகுசெலவு ........................................ 27

6.2 2011 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதி தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள்

6.3 மாதாந்தக் கணக்குக் கூற்றுப் படிவம் ........................................ 29

## அட்டவணைகளின் பட்டியல்

*அட்டவணை 01 - மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொகுத்த மின்சார இழப்புகள் தொடர்பான கொடுப்பனவுகளும் மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல்களும்*

*அட்டவணை 02 - மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு தொகுத்த மின்சார இழப்பு தொடர்பான கொடுப்பனவுகளும் மின்சார விநியோகங்களின் எதிர்வுகூறலும்*

*அட்டவணை 03 - அனுமதிக்கப்பட்ட மின்சார விற்பனைகள், கொள்வனவுகள் மற்றும் இழப்புகள்*

*அட்டவணை 04 - தொகுக்கப்பட்ட மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் சில்லறை வருமானங்களும் அனுமதிக்கப்பட்ட வருமானங்களும்*

*அட்டவணை 05 - தொகுக்கப்பட்ட மின்சார செலுத்துகை மற்றும் தொமிவிஇசெவி வருமானங்களும் அனுமதிக்கப்பட்ட வருமானங்களும்*

*அட்டவணை 06 - மின்சாரம் அனுப்பவியலாத மரீமீபுச மின்பொறித்தொகுதிகளுக்கான தொகுக்கப்பட்டதும் அனுமதிக்கப்பட்டதுமான கொடுப்பனவுகள்*

*அட்டவணை 07 - தனி மின்சார வாங்குநரின் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் (மின்சார செலுத்துகை மற்றும் தொமிவிஇசெவி உள்ளிட்ட)*

*அட்டவணை 08 - இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் குறுங்காலக் கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கான தொகுக்கப்பட்ட ஏற்பாடுகள்*

*அட்டவணை 09 - மின்சார செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு சேவைகளின் அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவுகள் பற்றிய பகுப்பாய்வு*

*அட்டவணை 10 - இறுதிப் பாவனையாளர்களுக்கான ஆகுசெலவுகள் தொகுப்பு (2011 சனவரி - யூன் வரை)*

*அட்டவணை 11 - இறுதிப் பாவனையாளர்களின் ஆகுசெலவு இடைவெளி பற்றிய பகுப்பாய்வு*

*அட்டவணை 12 - நீண்ட காலக் கடன் நிவாரணத்திற்கான அரசாங்க மானிய மதிப்பீடு*

*அட்டவணை 13 - அரசாங்க மானியங்கள் உள்ளிட்ட ஆகுசெலவுகள் தொகுப்பு*

*அட்டவணை 14 - தற்போதைய வரித்தீர்வை தொடர்ந்திருக்குமாயின் 2011 ஆம் ஆண்டில் தேவைப்படுத்தப்படும் மானியங்களும் மின்சார விநியோக ஆகுசெலவுகளும்*

*அட்டவணை 16 - பாகா வரித்தீர்வையில் உத்தேசிக்கப்பட்ட இடைவெளிகள்*

*அட்டவணை 17 - 2011 ஆம் ஆண்டு தொடர்பில் வரியினூடாக அறவிடப்படவிருக்கும் வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்படுவதில் அனுமதிக்கப்பட்ட சக்தி*

*அட்டவணை 18 – ஏற்கனவேயிருக்கின்ற மற்றும் உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள் - 2011 சனவரிமுதல் யூன்*

*அட்டவணை 19 – உத்தேசிக்கப்பட்ட மாதாந்தக் கணக்குக் கூற்றுப் படிவம் (LV வாடிக்கையாளர்கள்)*

*அட்டவணை 20 – உத்தேசிக்கப்பட்ட மாதாந்தக் கணக்குக் கூற்றுப் படிவம் (LV தொகை மின்சார மற்றும் MV வாடிக்கையாளர்கள்)*

## சுருக்கங்கள் அடங்கிய பட்டியல்

| | |
|---|---|
| தொமிவிஇசெவி | தொகை மின்சார விநியோக இயக்கச் செயற்பாட்டு விவகாரம் |
| தொமிவிவ | தொகை மின்சார விநியோக வரித்தீர்வை |
| மூசெ | மூலதனச் செலவினம் |
| இமிச | இலங்கை மின்சார சபை |
| DT | மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| DL1 | இமிச மின்சார பகிர்ந்தளிப்பு பிராந்தியம் 1 தொடர்பில் மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| DL2 | இமிச மின்சார பகிர்ந்தளிப்பு பிராந்தியம் 2 தொடர்பில் மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| DL3 | இமிச மின்சார பகிர்ந்தளிப்பு பிராந்தியம் 3 தொடர்பில் மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| DL4 | இமிச மின்சார பகிர்ந்தளிப்பு பிராந்தியம் 5 தொடர்பில் மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| DL5 | மின்சார செலுத்துகை விநியோக அனுமதிப் பத்திரம் பெற்ற லங்கா இலெக்ரிசிற்றி கம்பனி (லெகோ) |
| எவிஒ | எரிபொருள் விநியோக ஒப்பந்தம் |
| CEB GL | இமிச மின்சார உற்பத்தி அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| GWh | ஜிகாவொட் மணித்தியாலம் |
| kVA | கிலோவொட் அம்பியர் |
| kW | கிலோவொட் |
| kWh | கிலோவொட் மணித்தியாலம் |
| லஇக | லங்கா இலெக்ரிசிற்றி கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் |
| இரூ | இலங்கை ரூபா |
| குமிவி | குறை மின்விசை |
| நமிவி | நடுத்தர மின்விசை |
| MWh | மெகாவொட் மணித்தியாலம் |
| மரீபுச | மரபு-ரீதியற்ற புதுப்பிக்கத்தகு சக்தி |
| இப | இயக்க பராமரிப்புகள் |
| இசெ | இயக்கச் செலவினம் |
| மிகொஒ | மின்சார கொள்முதல் ஒப்பந்தம் |
| சிமிஉ | சிறு மின்சார உற்பத்தியாளர்கள் |
| TL | மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு |
| தொமிவிஇசெவி | தொகை மின்சார விநியோக இயக்கச் செயற்பாட்டு விவகாரம் |
| பாகா | பாவனை காலம் |
| பெசேவ | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி |
| நிப | நிகழும் பணி |

# 2011-2015 வரையான காலப்பகுதிக்குரிய வரித்தீர்வைத் தயாரித்தல் பற்றிய ஆலோசனைப் பத்திரம்

## *1. முன்னுரை*

ஆணைக்குழு அங்கீகரித்த ஆகுசெலவு-பிரதிபலிப்பு முறையியலுக்கு இணங்க வரித்தீர்வையைத் தயாரிக்கும் விடயத்தில் பங்கேற்க விரும்பும் நுகர்வோரையும் ஏனைய தரப்புகளையும் அனுமதிக்கும் நோக்கம் தொடர்பில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் ("சட்டம்") 30 ஆம் பிரிவின் கீழ் இந்த ஆலோசனைப் பத்திரம் வெளியிடப்படுகின்றது.

குறித்த சட்டத்தின் 32 (2) (அ) பிரிவுக்கு இணங்க, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதி, வரித்தீர்வைகள் தொடர்பான ஆகுசெலவு-பிரதிபலிப்பு முறையியல் ஒன்றை அங்கீகரித்தது. பின்னர் ஆணைக் குழு, மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற சகல தரப்புகளுக்கும் இந்த முறையியலை வெளியிட்டு அறிமுகப்படுத்தியது. இந்தத் தரப்புகளுக்கு வெளியிடப்பட்ட வரித்தீர்வை தொடர்பான இந்த முறையியல் தனியானவொரு ஆவண[1] அமைப்பில் கிடைக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது. இந்த ஆவணத்தில் பின்வரும் முக்கியமான சிறப்பம்சங்கள் அடங்குகின்றன.

(i) மின்சார செலுத்துகை, தொகை மின்சார விநியோக அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு ("தனி மின்சார வாங்குநர்") உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தைக் கொள்வனவு செய்து மின்சார பகிர்ந்தளிப்பு விநியோக அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளினூடாக இறுதிப் பயன் வாடிக்கையாளருக்கு விநியோகிக்கப்படுதல். உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் இந்த விதத்தில் விநியோகிக்கப்படுகின்றமை தொடர்பில் அனுமதிக்கப்பட்ட ஆகு செலவுகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை திருத்தப்படுதல்.

(ii) மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பின் மின்சார செலுத்துகை, தொகை மின்சார விநியோக இயக்கச் செயற்பாட்டு விவகாரங்களின் மூலம் அறவிடப்படக் கூடிய வரித்தீர்வைகள் பல வருட வரித்தீர்வைக் கோட்பாடுகள் அடிப்படையில் அமைந்திருத்தல். அதே நேரம் மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு தொடர்பில் அனுமதிக்கப்படும் வருமான அடிப்படையும் (அ) மின்சார செலுத்துகை தொடர்பான பாரிய மூலதன முதலீடுகள் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எழும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள், (ஆ) பணவீக்க மற்றும் நாணயமாற்று வீத வித்தியாசங்கள் தொடர்பான கணக்கில் அனுமதிக்கப்பட்ட வருமான அடிப் படையிலான வருடாந்த சீராக்கல்களுக்கு அமைய, முழுமையான வரித்தீர்வை காலம் ("நிலையானவொரு வருமான வரைறயை") தொடர்பில் ஒவ்வொரு வருடமும் அதே விலையில் வரையறுக்கப்படுதல்.

(iii) மின்சார பகிர்ந்தளிப்பு விநியோக அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் அறவிடக் கூடிய வரித்தீர்வைகள் பல வருட வரித்தீர்வைக் கோட்பாடுகள் அடிப்படையில் அமைந்திருத்தல். அதே நேரம் மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பு தொடர்பிலும் அனுமதிக்கப்பட்ட வருமான அடிப்படையும் வரையறுக்கப்படுதல். ஆயினும், பணவீக்கம், நாணயமாற்று வீத வித்தியாசங்கள் மற்றும் வாடிக்கையாளர் எண்ணிக்கை வித்தியாசங்கள் மற்றும் விற்பனை செய்யப்படும் மின்சாரத்தின் அளவு என்பவற்றின் அடிப்படையிலான கணக்கு தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வருமான அடிப்படைக்கான வருடாந்த சீராக்கல்களுக்கு அமைய வரித்தீர்வை காலம் ("மாறுபடக்கூடியவொரு வருமான வரையறை") தொடர்பில் ஒவ்வொரு வருடமும் வித்தியாசப்படுதல்.

(iv) ஆணைக்குழு, (அ) உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றமை தொடர்பான ஆகுசெலவை நிர்ணயிப்பதற்கான முதல் ஆறு மாத காலம், 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியில் ஆரம்பமாகும் எனவும், (ஆ) மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் அனுமதிக்கப் பட்ட வருமானங்கள் தொடர்பான முதலாவது வரித்தீர்வை காலம், 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடங்கி ஐந்து வருடங்களுக்குச் செயல்வலுப் பெற்றிருக்கும் எனவும் தீர்மானித்துள்ளமை.

(v) உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றமை தொடர்பில் அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவில் நிலவும் வித்தியாசங்களை ஒவ்வொரு ஆறு மாத கால இடைவெளியிலும், மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வருமானங்களை 12 மாதங்களுக்கு ஒரு தடவையும் பிரதிபலிக்கச் செய்யும் வகையில், இறுதிப் பயன் வாடிக்கையாளர் வரித்தீர்வைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு தடைவ மாற்றப்படுதல்.

(vi) அனுமதிக்கப்பட்ட வருமானங்களை நிர்ணயிக்கும் வகையில் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஆணைக்குழு, மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொகுத்த ஒரு அதிவிஷேட வரித்தீர்வை, 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடைமுறைக்கு வரும் எனவும், முதலாவது வரித்தீர்வை காலத்தின் எஞ்சிய காலப்பகுதி தொடர்பில் (அதாவது 2012-2015) அந்த நேரத்தில், உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கலாக அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பு தொடர்பிலும்

கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்று ஆணைக்குழுவைக் கொண்டு தொகுக்கப்படுதல் வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளமை.

(vii) மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பினதும் ஆகுசெலவுகளின் வித்தியாசம் பாராது, இறுதிப் பயன் வாடிக்கையாளருக்கான ஒரே மாதிரியான தேசிய வரித்தீர்வைகளைப் பேணுவதற்கான தேவைப்பாட்டின் அடிப்படையில், ஆணைக்குழு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளை அவற்றின் வருமானத் தேவைப்பாடுகளை மாத்திரம் தொகுத்து வழங்குமாறு கேட்டுக்கொண்டமை. வருமானத் தேவைப்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர், ஆணைக் குழு இறுதிப் பயன் வாடிக்கையாளர் வரித்தீர்வைகளை நிர்ணயிக்கும் பொருட்டு அனுமதிக்கப்பட்ட அத்தகைய வருமான அடிப்படைகளைப் பிரயோகித்தல்.

வரித்தீர்வைகளைத் தயாரிப்பது தொடர்பான பின்வரும் கால அட்டவணையை, ஆணைக்குழு அனுமதித்து வெளியிட்டது.

- முதலாவது வரித்தீர்வை காலம் தொடர்பில், அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் மூல வருமானத் தேவைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலம்: 2010 செப்டம்பர் 09 (நிறைவு)
- அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் மூல வருமானத் தேவைப்பாடுகளின் தொகுப்பு பற்றிய பகுப்பாய்வு, விளக்கங்கள் மற்றும் ஆணைக்குழுவின் பிரேரணைகளைத் தயாரித்தல் என்பவற்றுக்கான காலம்: 2010 ஒற்றோபர் 14 (நிறைவு)
- பகிரங்க ஆலோசனைகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட காலம்: 2010 நவம்பர் 24 முதல் திசம்பர் 08
- பகிரங்க கேட்டல்: 2010 திசம்பர் 15
- புதிய வரித்தீர்வைகள் செயல்வலுப் பெறும் நாள்: 2011 சனவரி 01

இலங்கை மின்சார சபைக்கு (இமிச) விநியோகிக்கப்பட்ட EL/T/09 - 002 ஆம் இலக்க மின்சார செலுத்துகை, தொகை மின்சார விநியோகம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தின் ஏற்புடைய 32 ஆம் பிரிவின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, இமிச 2011 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஆரம்பமாகும் காலப்பகுதிக்கான தனது வருமானத் தேவைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளது.

மின்சார பகிர்ந்தளிப்பு, விநியோகம் தொடர்பான அனுமதிப் பத்திரங்களின் 31 ஆம் நிபந்தனையின் ஏற்புடைய பிரிவைப் பூர்த்தி செய்து, அனுமதிப் பத்திரம் பெற்ற, அதாவது

(i) பிராந்தியம் 1 தொடர்பில் - இலங்கை மின்சார சபை (இதனகத்துப் பின்னர் DL1 எனக் குறிப்பீடுசெய்யப்படும்)
(ii) பிராந்தியம் 2 தொடர்பில் - இலங்கை மின்சார சபை (இதனகத்துப் பின்னர் DL2 எனக் குறிப்பீடுசெய்யப்படும்)
(iii) பிராந்தியம் 3 தொடர்பில் - இலங்கை மின்சார சபை (இதனகத்துப் பின்னர் DL3 எனக் குறிப்பீடுசெய்யப்படும்)
(iv) பிராந்தியம் 4 தொடர்பில் - இலங்கை மின்சார சபை (இதனகத்துப் பின்னர் DL4 எனக் குறிப்பீடுசெய்யப்படும்)
(v) லங்கா இலெட்ரிசிற்றி கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் (இதனகத்துப் பின்னர் DL5 எனக் குறிப்பீடுசெய்யப்படும்)

ஆகிய ஐந்து தரப்புகள், 2011 ஆம் ஆண்டு சனவரியில் ஆரம்பமாகும் காலப்பகுதிக்கான தத்தமது வருமானத் தேவைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளன.

இந்த ஆலோசனைப் பத்திரம் ஆறு பாகங்களில் அமைந்திருக்கும். இரண்டாவது பாகம் ஆணைக்குழு பகிரங்கக் கருத் துரைகளை அழைத்தல் அத்தகைய கருத்துரைகள் கிடைக்கப் பெறும் விதம் ஆகியன பற்றிய முக்கியமான விடயங்களைப் பிரதிபலிக்கும். மூன்றாவது பாகம் அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்புக்குமான அனுமதிக்கப்பட்ட வருமானங்களைப் பிரதிபலிக்கும். நான்காவது பாகம் குறித்த துறைக்கான அரசாங்க மானியங்கள் பற்றிய ஒரு பகுப்பாய்வைப் பிரதிபலிக்கும். அடுத்தது 2011-2015 ஆம் ஆண்டுகளுக்கான ஆகுசெலவு-பிரதிபலிப்பு வரித்தீர்வைகளை அடைவதற்கான வரித்தீர்வை மீளகட்டமைத்தல் மற்றும் மீள்சமநிலைப்படுத்தல் பற்றிய வழிகாட்டியைப் பிரதிபலிக்கும். இறுதியாக ஆறாவது பாகம் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியில் ஆரம்பமாகும் முதலாவது ஆறு மாத காலப்பகுதிக்கு ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட மானியங்கள், மிகைக் கட்டணங்கள், மற்றும் இறுதிப் பயன் வாடிக்கையாளர் வரித்தீர்வைகள், ஒவ்வொரு வாடிக்கையாளர் வகுதிக்குமான மின்சார விநியோக ஆகுசெலவு என்பவற்றை முன்வைக்கும்.

## *2. பகிரங்கக் கருத்துரைகளை வரவேற்றல்*

இந்த ஆலோசனை பத்திரத்தின் ஒவ்வொரு பாகத்தின் கீழும் பட்டியல்படுத்தப்பட்ட பின்வரும் விஷேட தீர்மானங்கள் தொடர்பில் ஆணைக்குழு பகிரங்கக் கருத்துரைகளை வரவேற்கின்றது.

*அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பு தொடர்பிலும் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள்*

மின்சார செலுத்துகை பகிர்நதளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பு தொடர்பிலும்:

(i) அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பினதும் மின்சார வலையமைப்பின் மின்சார விற்பனை எதிர்வுகூறலும் அனுமதிக்கப் பட்ட மின்சார இழப்புகளும் (2011-2015)
(ii) அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பு தொடர்பிலும் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் (2011-2015)
(iii) வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்பட்ட மின்சாரம் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட நிதியேற்பாடு (2011-2015)

மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு தொடர்பில்:

(iv) மின்சார உற்பத்தியிலிருந்து வரும் அனுமதிக்கப்பட்ட கொள்வனவுகளின் ஆகுசெலவுகள்

(v) மின்சார உற்பத்தி முறைமையின் ஏனைய மின்பொறித் தொகுதிகளினது தவிர்க்கப்பட்ட ஆகுசெலவுகளுக்கு மேலதிகமாக அனுப்பவியலாத மரபு-ரீதியற்ற புதுப்பிக்கத்தகு சக்தி மைய மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற வசதிகளிலிருந்து வரும் மின்சாரக் கொள்வனவுகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட நிதியேற்பாடு

*வரித்தீர்வை மீள்கட்டமைத்தல் மற்றும் மீள்சமநிலைப்படுத்தல் பற்றிய வழிகாட்டி*

(vi) ஆகுசெலவு-பிரதிபலிப்பு வரித்தீர்வைகளை நோக்கி வாடிக்கையாளர் வரித்தீர்வைகளை நகர்த்தும் முகமாக ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படும் வரித்தீர்வை மீள்கட்டமைப்பு

(vii) வரித்தீர்வைகள் பாவனை காலத்தை (பாகா) நடைமுறைப்படுத்துவது தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட கால இடைவெளிகள்

(viii) 2014 ஆம் ஆண்டு அளவில் சமநிலையடையும் வகையிலும் 2015 ஆம் ஆண்டளவில் இலாபம் அடையும் வகையிலும் மின்சாரத் துறையை நகர்த்தும் இலக்கு

*2011 ஆம் ஆண்டு சனவரி 01 முதல் வாடிக்கையாளர்களினால் செலுத்தப்படக்கூடிய வரித்தீர்வைகள்*

(ix) வரித்தீர்வை அட்டவணை

(x) மாதாந்தக் கணக்குக் கூற்று உள்ளடக்கங்கள்

[1] ஆணைக்குழுவை வேண்டிக்கொள்வதன் பேரில் அல்லது www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தைக் கீழிறக்கம் செய்வதன் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பகிரங்கக் கருத்துரைகளை இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03 என்ற முகவரியிலுள்ள இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரத்தின் 06-வது மாடியில் அமைந்திருக்கும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சென்று சமர்ப்பிக்கலாம்.

கருத்துரைகளை tariff@pucsl.gov.lk என்ற மின்னஞ்சலுக்கும் அனுப்பி வைக்கலாம்.

## 3. அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள்

### 3.1 மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறலும் அனுமதிக்கப்பட்ட மின்சார இழப்புகளும்

மின்சார எதிர்வுகூறல் விற்பனைகள் மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு தொடர்பில் அனுமதிக்கப்பட்ட இழப்புகள் ஆகியன அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் முதலீடுகள் மற்றும் இயக்க ஆகுசெலவுகள், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றமை தொடர்பான ஆகுசெலவகள் என்பவற்றின் மீது தாக்கத்தைச் செலுத்தும்.

#### 3.1.1 அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொகுத்த மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறலும் மின்சார இழப்புகளும்

மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பிடமிருந்து (TL) வரும் மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல்கள், மின்சாரக் கொள்வனவுகள் மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் (DL) தொகுத்த மின்சார இழப்பு தொடர்பான கொடுப்பனவுகள் என்பன பற்றிய தரவுகள் அட்டவணை 01 இல் காட்டப்பட்டுள்ளன. மின்சார உற்பத்தியிலிருந்து மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளுக்கான (DL) மின்சார விற்பனைகள் மற்றும் மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு (TL) தொகுத்த மின்சார இழப்புகள் தொடர்பான கொடுப்பனவுகள் என்பன பற்றிய தரவுகள் அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளன.

***அட்டவணை 01 - மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தொகுத்த மின்சார இழப்புகள் தொடர்பான கொடுப்பனவுகளும் மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல்களும்***

| ஆண்டு | DL1 | | | DL2 | | | DL3 | | | DL4 | | | DL5 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | தொகுக்கப்பட்டவாறு | | | தொகுக்கப்பட்டவாறு | | | தொகுக்கப்பட்டவாறு | | | தொகுக்கப்பட்டவாறு | | |
| | கொள்வனவுகள் (GWh) | மின்சார விற்பனைகள் (GWh) | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | மின்சார விற்பனைகள் (GWh) | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | இழப்பு |
| 2009 | 2,663 | 2,354 | 11.6% | 3,208 | 2,734 | 14.8% | 2,033 | 1,809 | 11.0% | 1,764 | 1,544 | 12.5% | 1,120 | 1,030 | 8.1% |
| 2010 | 2,849 | 2,519 | 11.6% | 3,421 | 2,925 | 14.5% | 2,175 | 1,936 | 11.0% | 1,850 | 1,628 | 12.0% | 1,232 | 1,132 | 8.1% |
| 2011 | 3,003 | 2,673 | 11.0% | 3,670 | 3,156 | 14.0% | 2,348 | 2,090 | 11.0% | 1,868 | 1,644 | 12.0% | 1,276 | 1,172 | 8.1% |
| 2012 | 3,199 | 2,847 | 11.0% | 3,899 | 3,361 | 13.8% | 2,501 | 2,226 | 11.0% | 1,990 | 1,751 | 12.0% | 1,321 | 1,214 | 8.1% |
| 2013 | 3,406 | 3,032 | 11.0% | 4,143 | 3,580 | 13.6% | 2,664 | 2,371 | 11.0% | 2,119 | 1,865 | 12.0% | 1,367 | 1,256 | 8.1% |
| 2014 | 3,628 | 3,229 | 11.0% | 4,402 | 3,812 | 13.4% | 2,837 | 2,525 | 11.0% | 2,257 | 1,986 | 12.0% | 1,413 | 1,298 | 8.1% |
| 2015 | 3,864 | 3,439 | 11.0% | 4,667 | 4,060 | 13.0% | 3,021 | 2,689 | 11.0% | 2,390 | 2,115 | 11.5% | 1,459 | 1,341 | 8.1% |

குறிப்புகள்: மின்சார இழப்புகள், அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பின் மூல கொள்வனவுகளின் ஒரு % எனத் தரப் பட்டுள்ளன.

***அட்டவணை 02 - மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு தொகுத்த மின்சார இழப்பு தொடர்பான கொடுப்பனவுகளும் மின்சார விநியோகங்களின் எதிர்வுகூறலும்***

| ஆண்டு | TL தொகுத்த மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல் (GWh) | TL தொகுத்த TL இற்கான உள்ளீடு (GWh) | TL தொகுத்த மின்சார இழப்புகள் (ஒரு % உள்ளீடு என) |
|---|---|---|---|
| 2010 | 10,347 | 10,634 | 2.70% |
| 2011 | 10,890 | 11,185 | 2.64% |
| 2012 | 11,559 | 11,917 | 3.00% |
| 2013 | 12,266 | 12,645 | 3.00% |
| 2014 | 13,022 | 13,424 | 3.00% |
| 2015 | 13,802 | 14,229 | 3.00% |

### *3.1.2 சீராக்கப்பட்ட மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறலும் அனுமதிக்கப்பட்ட மின்சார இழப்புகளும்*

அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புக்கான மின்சார இழப்பு தொடர்பான கொடுப்பனவுகளுக்கு பின்வரும் சீராக்கல்கள் மேற் கொள்ளப்படன.

(a) 2009 ஆம் ஆண்டு தொடர்பில் தொகுக்கப்பட்ட மின்சார இழப்புகளை ஆணைக்குழு மீளாய்வு செய்தது. இமிச மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பின் (DL5 என்ற லங்கா இலெக்ரிசிற்றி கம்பனிக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) தொகுக்கப்பட்ட மின்சார விற்பனைகள் 8441GWh ஜிகாவொட்டாகவிருந்தது. அந்த அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில், மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் மின்சார இழப்புகள் 2.7% வீதமாகவிருந்தது. ஆதலால் மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் மின்சார வலையமைப்பு தொடர்பில் கணிக்கப்பட்ட உள்ளீடு 9936GWh ஜிகாவொட்டாகவிருக்கும். எனவே, 2009 ஆம் ஆண்டிற்கான இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் (TL, மற்றும் DL1, DL2, DL3, DL4) மின்சார வலையமைப்புகளினது மொத்த மின்சார இழப்பானது மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புக்கான உள்ளீட்டுப் பங்கு என்ற வகையில் 15.0% வீதமாகவிருக்கலாம். மின் பொறித் தொகுதி மற்றும் துணை மின்பொறித் தொகுதித் தேவைப்பாடுகள் சேர்ந்தமை மற்றும் மின்பொறித் தொகுதி அமைக்கப்பட்டமை என்பவற்றைத் தொடர்ந்து இமிச பிரிதொருவிடத்தில் அறிக்கையிட்ட மின்மாற்றி மின்சார இழப்புகளின் மொத்தம் 14.6% வீதமாகவிருந்தது. 2009 ஆம் ஆண்டிற்கான சகல இமிச மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளினதும் அனுமதிக்கப்பட்ட மின்சார இழப்புகள் குறைக்கப்பட்டதன் மூலம் இந்தப் பொருத்தமின்மை சீராக்கப்பட்டது.

(b) மேற்குறித்த சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட, இலங்கையின் மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு வலையமைப்பின் 2009 ஆம் ஆண்டிற்கான மொத்த மின்சார இழப்புகள் 14.2% வீதமாகவிருந்துள்ளன என மதிப்பிடப் பட்டிருப்பதை ஆணைக்குழு அவதானிக்கின்றது. இந்த இழப்புகள், தேசிய சக்திக் கொள்கை மற்றும் திறமுறைகளில்[2] உறுதிப்படுத்தப்பட்ட 13.5% கொள்கை இலக்கில் குறைபாடு காணப்படுகின்றது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

(c) 2015 ஆம் ஆண்டில் முழு மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு வலையமைப்பு தொடர்பில் சீராக்கப்படாத மின்சார இழப்புகள் (தொகுக்கப்பட்டவாறு) 14.4% வீதமாகவிருந்து. சீராக்கப்பட்ட மின்சார இழப்புகள் 2015 ஆம் ஆண்டில் 13.3% வீத முழு மின்சார வலையமைப்பு இழப்பொன்றைச் சுட்டிக்காட்டுகின்றன. 2016 ஆம் ஆண்டு தொடர்பில் 12% மின்சார செலுத்துகை பகிர்ந்தளிப்பு இழப்புகள் (தேறிய மின்சார உற்பத்திப் பங்கொன்றாக) இலக்கு அரசாங்கத்தின் பத்தாண்டுத் திட்டத்தில் [3] உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற சகல தரப்புகளினதும் அனு மதிக்கப்பட்ட மின்சார இழப்புகள் 2015 ஆம் ஆண்டளவில் எதிர்நோக்கவிருக்கும் 12.1% மின்சார இழப்பு இலக்கை ஈடு செய்யக்கூடிய வகையில் மேலும் குறைத்து சீராக்கப்பட்டன.

(d) TL மின்சார வலையமைப்புக்கான உள்ளீட்டுப் பங்காக விளங்கும் TL இழப்புகள் தொகுக்கப்பட்டவாறு அதிமதிக்கப்பட்டன.

அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பினது மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல்களுக்கு பின்வரும் சீராக்கல்கள் மேற் கொள்ளப்பட்டன.

(e) 2012-2015 வரையான காலப்பகுதி தொடர்பில் மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு தொகுத்த மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல், மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பின் நேரடி வாடிக்கையாளர்களான DL1, DL2, DL3, DL4 ஆகியன தொகுத்த மின்சாரக் கொள்வனவுகளுடன் பொருந்தவில்லை. மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பினது சீராக்கப்பட வேண்டிய மின்சாரக் கொள்வனவு எதிர்வுகூறல்களைக் கருத்திற்கொண்டு இந்த பொருத்தமின்மை சீராக்கப்பட்டது.

(f) 2010 ஆம் ஆண்டிற்கான DL1, DL2, DL3, DL4 ஆகியன தொடர்பான மின்சார விற்பனை வளர்ச்சி எதிர்வுகூறல்கள் 5.5% முதல் 7.0% வரையான வீச்சில் காணப்பட்டன. அதே நேரம் DL5 எதிர்வுகூறல் வளர்ச்சி 9.9% வீதமாகவிருந்தது. DL1, DL2, DL3, DL4 ஆகியவற்றின் மூல மின்சார விற்பனைகள் அதிகரித்துக் காணப்பட்டன. இந்த அதிகரிப்புகள் 2010 ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள சகல மின்சார விற்பனைகள் தொடர்பில் மிக அதிகமான 7.9% உண்மையான ஒரு வளர்ச்சி வீதத்தைப் பிரதிபலிக்கின்றன.

(g) DL5 வீதி ஒளியேற்றலுக்கான சில மின்சார விற்பனைகளை மின்சார இழப்புகள் எனத் தொகுத்துள்ளது. விளக்கத்திற்கான பதில் அடிப்படையில் இது சீராக்கப்பட்டது.

(h) DL4 2011 ஆம் ஆண்டு தொடர்பில் 1.0% குறைந்த ஒரு மின்சார விற்பனைகள் வளர்ச்சியைத் தொகுத்துள்ளது. இது 5.0% வீதத்திற்குச் சீராக்கப்பட்டது.

அதற்கிணங்க, வரித்தீர்வைகளைத் தயாரிப்பதில், அஆணைக்குழு அட்டவணை 03 இல் காட்டப்பட்ட அனுமதிக்கப்பட்ட மின்சார எதிர்வுகூறல்களையும் அனுமதிக்கப்பட்ட மின்சார இழப்புகளையும் உறுதிப்படுத்த எண்ணுகின்றது.

***அட்டவணை 03 - அனுமதிக்கப்பட்ட மின்சார விற்பனைகள், கொள்வனவுகள் மற்றும் இழப்புகள்***

| ஆண்டு | DL1 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | | சீராக்கப்பட்ட | | | |
| | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | இழப்பு | | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | அனுமதிக்கப்பட்ட நட்டம் |
| 2009 | 2,663 | 2,354 | | 11.6% | | 2,614 | 2,354 | | 10.0% |
| 2010 | 2,849 | 2,519 | 7.0% | 11.6% | | 2,828 | 2,547 | 8.2% | 10.0% |
| 2011 | 3,003 | 2,673 | 6.1% | 11.0% | | 2,983 | 2,704 | 6.2% | 9.3% |
| 2012 | 3,199 | 2,847 | 6.5% | 11.0% | | 3,164 | 2,882 | 6.6% | 8.9% |
| 2013 | 3,406 | 3,032 | 6.5% | 11.0% | | 3,360 | 3,071 | 6.6% | 8.6% |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2014 | 3,628 | 3,229 | 6.5% | 11.0% | 3,568 | 3,272 | 6.5% | 8.3% |
| 2015 | 3,864 | 3,439 | 6.5% | 11.0% | 3,797 | 3,486 | 6.5% | 8.2% |

| ஆண்டு | DL2 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | சீராக்கப்பட்ட | | | |
| | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | அனுமதிக்கப்பட்ட நட்டம் |
| 2009 | 3,208 | 2,734 | | 14.8% | 3,149 | 2,734 | | 13.2% |
| 2010 | 3,421 | 2,925 | 7.0% | 14.5% | 3,396 | 2,958 | 8.2% | 12.9% |
| 2011 | 3,670 | 3,156 | 7.9% | 14.0% | 3,645 | 3,193 | 8.0% | 12.4% |
| 2012 | 3,899 | 3,361 | 6.5% | 13.8% | 3,858 | 3,403 | 6.6% | 11.8% |
| 2013 | 4,143 | 3,580 | 6.5% | 13.6% | 4,074 | 3,626 | 6.6% | 11.0% |
| 2014 | 4,402 | 3,812 | 6.5% | 13.4% | 4,311 | 3,863 | 6.5% | 10.4% |
| 2015 | 4,667 | 4,060 | 6.5% | 13.0% | 4,573 | 4,116 | 6.5% | 10.0% |

[2]தேசிய சக்திக் கொள்கையும் திறமுறைகளும், 2008 சனவரி செவ்வாய்க்கிழமை 10 ஆம் திகதிய 1553/10 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி

| ஆண்டு | DL3 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | சீராக்கப்பட்ட | | | |
| | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | அனுமதிக்கப்பட்ட நட்டம் |
| 2009 | 2,033 | 1,809 | | 11.0% | 1,995 | 1,809 | | 9.3% |
| 2010 | 2,175 | 1,936 | 7.0% | 11.0% | 2,159 | 1,957 | 8.2% | 9.3% |
| 2011 | 2,348 | 2,090 | 8.0% | 11.0% | 2,332 | 2,115 | 8.1% | 9.3% |
| 2012 | 2,501 | 2,226 | 6.5% | 11.0% | 2,474 | 2,253 | 6.6% | 8.9% |
| 2013 | 2,664 | 2,371 | 6.5% | 11.0% | 2,627 | 2,401 | 6.6% | 8.6% |
| 2014 | 2,837 | 2,525 | 6.5% | 11.0% | 2,790 | 2,558 | 6.5% | 8.3% |
| 2015 | 3,021 | 2,689 | 6.5% | 11.0% | 2,969 | 2,726 | 6.5% | 8.2% |

| ஆண்டு | DL4 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | சீராக்கப்பட்ட | | | |
| | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | அனுமதிக்கப்பட்ட நட்டம் |
| 2009 | 1,764 | 1,544 | | 12.5% | 1,732 | 1,544 | | 10.9% |
| 2010 | 1,850 | 1,628 | 5.5% | 12.0% | 1,836 | 1,646 | 6.6% | 10.4% |
| 2011 | 1,868 | 1,644 | 1.0% | 12.0% | 1,930 | 1,730 | 5.1% | 10.4% |
| 2012 | 1,990 | 1,751 | 6.5% | 12.0% | 2,051 | 1,843 | 6.6% | 10.1% |
| 2013 | 2,119 | 1,865 | 6.5% | 12.0% | 2,173 | 1,964 | 6.6% | 9.6% |
| 2014 | 2,257 | 1,986 | 6.5% | 12.0% | 2,305 | 2,093 | 6.5% | 9.2% |
| 2015 | 2,390 | 2,115 | 6.5% | 11.5% | 2,440 | 2,230 | 6.5% | 8.6% |

| ஆண்டு | DL5 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | சீராக்கப்பட்ட | | | |
| | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | அனுமதிக்கப்பட்ட நட்டம் |
| 2009 | 1,120 | 1,030 | | 8.1% | 1,120 | 1,051 | | 6.2% |
| 2010 | 1,232 | 1,132 | 9.9% | 8.1% | 1,231 | 1,155 | 9.9% | 6.2% |
| 2011 | 1,276 | 1,172 | 3.6% | 8.1% | 1,273 | 1,198 | 3.7% | 5.9% |
| 2012 | 1,321 | 1,214 | 3.6% | 8.1% | 1,314 | 1,241 | 3.6% | 5.6% |
| 2013 | 1,367 | 1,256 | 3.5% | 8.1% | 1,357 | 1,284 | 3.5% | 5.4% |
| 2014 | 1,413 | 1,298 | 3.3% | 8.1% | 1,399 | 1,327 | 3.3% | 5.2% |
| 2015 | 1,459 | 1,341 | 3.3% | 8.1% | 1,442 | 1,370 | 3.3% | 5.0% |

| ஆண்டு | TL | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | சீராக்கப்பட்ட | | | |
| | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | இழப்பு | கொள்வனவுகள் (GWh) | விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | அனுமதிக்கப்பட்ட நட்டம் |
| 2009 | | | | | 9,754 | 9,491 | | 2.7% |
| 2010 | 10,347 | 10,634 | | 2.7% | 10,503 | 10,219 | 7.7% | 2.7% |
| 2011 | 10,890 | 11,185 | 5.2% | 2.6% | 11,185 | 10,890 | 6.6% | 2.6% |
| 2012 | 11,559 | 11,917 | 6.5% | 3.0% | 11,903 | 11,546 | 6.0% | 3.0% |
| 2013 | 12,266 | 12,645 | 6.1% | 3.0% | 12,612 | 12,233 | 6.0% | 3.0% |
| 2014 | 13,022 | 13,424 | 6.2% | 3.0% | 13,375 | 12,974 | 6.1% | 3.0% |
| 2015 | 13,802 | 14,229 | 6.0% | 3.0% | 14,206 | 13,780 | 6.2% | 3.0% |

| ஆண்டு | முழு TL மற்றும் சகல DL மின்சார வலையமைப்புகள் | | | | | | | | இலங்கை T&D இழப்புகளுக்கான கொள்கை இலக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகுக்கப்பட்டவாறு | | | | சீராக்கப்பட்ட | | | | |
| | இறுதிப் பயன் வாடிக்கையாளர் களுக்கான விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | TL மின்சார வலையமைப் புக்கான உள்ளீடு (GWh) | இலங்கை T&D இழப்பு | இறுதிப் பயன் வாடிக்கையாளர் களுக்கான விற்பனைகள் (GWh) | விற்பனைகளின் அதிகரிப்பு | TL மின்சார வலையமைப் புக்கான உள்ளீடு (GWh) | இலங்கை T&D இழப்பு | |
| 2009 | 8,351 | | | | 8,371 | - | 9,754 | 14.2% | 13.5% |
| 2010 | 8,908 | 6.7% | 10,634 | 16.2% | 9,031 | 7.9% | 10,503 | 14.0% | |
| 2011 | 9,460 | 6.2% | 11,185 | 15.4% | 9,667 | 7.0% | 11,185 | 13.6% | |
| 2012 | 10,078 | 6.5% | 11,917 | 15.4% | 10,308 | 6.6% | 11,903 | 13.4% | |
| 2013 | 10,736 | 6.5% | 12,645 | 15.1% | 10,989 | 6.6% | 12,612 | 12.9% | |
| 2014 | 11,437 | 6.5% | 13,424 | 14.8% | 11,713 | 6.6% | 13,375 | 12.4% | |
| 2015 | 12,184 | 6.5% | 14,229 | 14.4% | 12,485 | 6.6% | 14,206 | 12.1% | 12.1% |
| 2016 | | | | | | | | | 12.0% |

### 3.2 அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவுகளும் செலவினமும்

ஆணைக்குழு இன்றைய வரித்தீர்வைத் தயாரிப்பை 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் முதலாவது வரித்தீர்வைத் தயாரிப்பு என அவதானிக்கின்றது. மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஐந்து தரப்புகளில் நான்கு தரப்புகளினது அனுமதிப் பத்திரங்கள் இலங்கை மின்சார சபையினால் (இமிச) நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரமும் இமி சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. இமிச ஒரு தனியான, நிலையான ஒன்றிணைந்த நிறுவனமாக இயங்குவதால், ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்தையும் நிறுத்தி வைக்கும் பிரிவுகளின் தொழிற்படு விவகாரங்கள் தொடர்பான வருடாந்தக் கணக்குகள் முன்கூட்டியே தயாரிக்கப்படவில்லை. கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை வருடாந்தம் ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிப்பது அனுமதிப் பத்திர நிபந்தனையில் காணப்படும் ஒரு தேவைப்பாடாகும். அதே போன்று, ஆகக்குறைந்தது எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கான மூலதன செலவின நிகழ்ச்சித்திட்டம் ஆணைக்குழுவின் அங்கீகாரத் திற்காகச் சமர்ப்பிக்கப்படத் தேவைப்படுத்தப்படுகின்றது.

இந்த வரித்தீர்வையைத் தயாரிக்கும் நடவடிக்கையில், ஆணைக்குழு இந்த இரண்டு தேவைப்பாடுகளிலிருந்தும் விலக்களிக்க எண்ணுவதோடு, (அ) 2011 மார்ச் மாதமளவில், அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பும் ஒரு மூலதனச் செலவின நிகழ்ச்சித்திட்டத்தைத் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகத் தொகுக்க வேண்டும் எனவும், (ஆ) அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பும் 2010 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட தனது கணக்குகளை 2011 யூன் மாதமளவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், இன்றைய வரித்தீர்வையைத் தயாரிப்பது தொடர்பில் கிடைக்கக்கூடிய தற்போதைய தகவல் களின் வரையறையைக் கருத்திற்கொண்டு (இ) 2012-2015 வரையான காலப்பகுதிக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற தரப் புகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக தமது வருமானத் தேவைப்பாடுகளைத் தொகுத்து ஒரு அதிவிஷேட வரித் தீர்வைத் தயாரிப்பை 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளது.

[3] பத்தாண்டு கிடை அபிவிருத்தி வேலைச்சட்டகம் 2006-2016, தேசி திட்டமிடல் திணைக்களம், நிதித் திட்டமிடல் அமைச்சு

#### 3.2.1 இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் கடன் மீள்கட்டமைப்பு

வரித்தீர்வையைத் தயாரிக்கும் நடவடிக்கையும் அதனுடன் சம்பந்தப்பட்ட நடைமுறைகளையும் ஆரம்பிக்க முன்னர், ஆணைக் குழு மின்சார உற்பத்தி ஆகுசெலவுகள், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கும், மின்வலு சக்தி அமைச்சுக்கும் கிடைக்கச் செய்த அத்தகைய தகவல்கள் உள்ளிட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பினதும் அநேகமான ஆகுசெலவுகள் பற்றிய ஒரு விரிவான மதிப்பீட்டை மேற்கொண்டது. 2009 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட ஆணைக் குழுவின் இன்றைய வரித்தீர்வைக் கட்டளை தொடர்ந்தும் பிரயோகிக்கப்பட வேண்டுமானால், இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் மின்சார இழப்புகளை தொடர்ந்தும் மேற்கொள்ளும் என பகுப்பாய்வு சுட்டிக்காட்டியது.

அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளை 2011-2015 வரையான காலப்பகுதி தொடர்பில் இலாபத்தை நோக்கி நகரச் செய்யும் பொருட்டு, 2010 யூன் மாதம், ஆணைக்குழு வாடிக்கையாளர் வரித்தீர்வைகளுக்கான பல சீர்திருத்தங்களை முன்வைத்தது. மின்சார உற்பத்தி ஆகுசெலவுகள் உண்மையான அமைப்பில் 2013 ஆம் ஆண்டு தொடர்ந்து அதிகரிக்கும் எனவும், அதன் பின்னர், அந்த ஆகுசெலவுகள் புத்தளம், அனல் மின்னுற்பத்திப் பொறித்தொகுதியினதும், திருகோணமலை அனல் மின்னுற் பத்திப் பொறித்தொகுதியினதும் 2 மற்றும் 3 ஆம் கட்டப் பணிகளின் உத்தியோகபூர்வ ஆரம்பத்தைக் கொண்டு குறையும் எனவும், ஆணைக்குழு அவதானித்தது. ஆதலால், ஆணைக்குழு (i) DL1, DL2, DL3, DL4 மற்றும் TL கடன்களை வழங்கு வதிலுள்ள பாரிய சுமை பற்றியும், (ii) இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆகுசெலவுகள் குறிப்பாக 2011-2013 வரையான காலப்பகுதியில் நியாயமான வரையறைகளினுள் நிருவகிக்கப்பட வேண்டிய வாடிக்கையாளர் விலைகளில் நேரடியாக அல்லது மறைமுகமாக தாக்கங்களைச் செலுத்துமாயின் அந்த ஆகுசெலவுகளைக் குறைப்பதற்கான தேவை பற்றியும் அரசாங்கத்திற்கு சுருக்கமாக எடுத்துரைத்தது.

கடன் ஆகுசெலவுகளை மதிப்பிடுவதில், திறைசேரிக்கான செயலாளரின் தலைமையில் 2010 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் சான்றுபடுத்தப்பட்ட கூட்டக்குறிப்புகளின் மூலம் ஆணைக்குழுவுக்கு வழிகாட்டப்படுகின்றது. இந்தக் கூட்டக்குறிப்புகள் இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற சகல தரப்புகளுக்கும் ஆணைக் குழுவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தக் கூட்டக்குறிப்புகள் (3) அ என்ற விடயத்தின் கீழ், **‘2009.12.31 இல் உள்ள திறைசேரி மற்றும் (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) இபெகூ ஆகியவற்றுக்கான மொத்த நிலுவைக் கடன் இருப்பு (இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின்) பூஜ்ஜியமாக இல்லையெனில் 2010.01.01 இல் இமி சபைக்கு நிலு வைக் கடன் ஏதுமில்லை’ எனக் கருதப்பட வேண்டும்’** என எடுத்துரைக்கின்றன. மேலே குறிப்பீடு செய்யப்பட்ட அதே திறைசேரிக் கூட்டக்குறிப்பின் பிரகாரம், 3 இ என்ற விடயத்தின் கீழ், **‘2010.01.01-2013.12.31 வரையான காலப்பகுதியில் ஏறக் குறைய 3 பில்லியன் அ.டொ முதலீடு (அரங்கம் மேற்கொண்ட) தொடர்பான மூலதன மற்றும் வட்டிக் கொடுப்பனவு உள்ளிட்ட கடன் தொகை இமி சபையினால் பொறுப்பேற்கப்பட வேண்டும். எனினும், 2009.12.31 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் மேற்கொண்ட முதலீடு தொடர்பான வட்டி ஆகுசெலவை இமிச பொறுப்பேற்க அவசியமில்லை. வரித்தீர்வைக் கணிப்பீட்டு நோக்கம் தொடர்பில் ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை வட்டி ஆகுசெலவு கருத்திற்கொள்ளப்படக் கூடாது’** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால், ஆணைக்குழு இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளை 2011-2015 வரையான காலப்பகுதிக்கான தமது வருமானத் தேவைப்பாடுகளை தொகுக்கும் போது மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

எனினும், அரசாங்கம் இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் குறுங்காலக் கடன்களை மீள்கட்டமைப்பது பற்றிய வழிகாட்டியை முன்வைக்கவில்லை.

#### 3.2.2 மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆகுசெலவுகள்

மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஐந்து தரப்புகளுக்கு தமது ஆகுசெலவுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு ஒரே மாதிரிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளிடமிருந்து மேலதகத் தகவல்களும் கோரப்பட்டன.

ஆரம்பத்தில், சூத்திரங்களில் காணப்பட்ட செவ்வையின்மைகள் தொடர்பில் சகல மாதிரிகளும் சீராக்கப்பட்டன. அதன் பின்னர், அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பினாலும் வழங்கப்படும் ஆதாரப்படுத்தும் தகவல்கள் மதிப்பிடப்பட்டு ஆகுசெலவுகள் தொடர்பான தேவையான சீராக்கல்களும் மேற்கொள்ளப்பட்டன. பின்வருவன மேற்கொள்ளப்பட்ட அத்த கைய சீராக்கல்கள் அடங்கிய ஒரு பட்டியலாகும்.

மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் (DL1, DL2, DL3, DL4):

(i) **நீண்ட காலக் கடன்கள்:** அரசாங்கத்தினால் குறிப்பீடுசெய்யப்பட்ட கடன் மீள்கட்டமைப்புத் திட்டம் (3.2.1 பிரிவைப்

பார்க்குக) இருந்தபோதிலும், இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளினால் இந்தப் பொறுப்புக்கள் (மூலதன மீள் கொடுப்பனவுகள் மற்றும் அதன் மீதான வட்டி, நிகழும் மூலதனச் செலவினக் கருத்திட்டங்களுக்கான கடன்கள் தொடர்பான நிர்மாண காலப்பகுதி வட்டி) தொகுக்கப்பட்டிருந்தன. இந்தப் பொறுப்புக்கள் தொகுக்கப்பட்ட ஆகு செலவுகளிலிருந்து நீக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வழங்கப்படத் தேவைப்படுத்தப் படுத்தலாம் எனும் மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள் அடங்கிய ஒரு அட்டவணையை முன்வைக்குமாறு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்த அட்டவணை கிடைக்கப் பெறவில்லை. ஆகையால், 2013 ஆம் ஆண்டில் முடிவடைகின்ற கடன்களைக் காலந்தாழ்த்திக் கொடுப்பதற்கான சட்ட இசைவின் பின்னரும் கூட இன்றைய வரித்தீர்வைத் தயாரிப்புக்கு நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் ஏதுமில்லை. 2011 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம் பிக்கும் வகையில் திட்டமிடப்பட்ட அதிவிஷேட வரித்தீர்வையைத் தயாரித்தல் காலப்பகுதியில் தொகுக்கப்பட்ட அத்தகைய ஏதாவது கடன்களையும், அந்தக் கடனுடன் சம்பந்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளையும் கருத்திற் கொள்ளுவதற்கு ஆணைக்குழு உத்தேசிக்கின்றது.

(ii) **குறுங்காலக் கடன்கள்:** அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் குறுங்காலக் கடன்களின் மீள்கொடுப்பனவு ஆகுசெலவை "தலைமை அலுவலக மேலதிகச் செலவுகள்" எனத் தொகுத்துள்ளன. அத்தகைய ஆகுசெலவு உள்ளீர்ப்பானது மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு ஆகுசெலவுகள் திரிவடையக் காரணமாக அமைகின்றன என ஆணைக்குழு அவதானிக்கின்றது. ஆகையால், ஆணைக்குழு அத்தகைய கடன் மீளறவீடுகளை மின்சார உற்பத்தி கொள்வனவு செய்யப் பட்டு விநியோகிக்கப்படுகின்றமை தொடர்பான ஆகுசெலவுகளின் (தயவு செய்து 3.2.7 என்ற பிரிவைப் பார்க்குக) கீழ் வரி யொன்றாக உள்ளீர்க்க உத்தேசிக்கின்றது.

(iii) **ஏனைய திருத்தங்கள்:**

(a) இயக்கச் செலவினமும் (இசெ) மூலதனச் செலவினமும் (மூசெ) ஒரு சில தொகுப்புகளில் கலந்து காணப்பட்டன. அதற்கு இணங்க இந்தச் செலவினங்கள் சீராக்கப்பட்டன. அதேபோன்று, ஒவ்வொரு செலவினத்துடனும் சம்பந்தப்பட்ட பெசேவ மற்றும் சுங்கத்தீர்வை வரி ஆக்கக்கூறுகள் என்பன சீராக்கப்பட்டன.

(b) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை என்ற முறையீட்டைக் கருத்திற்கொண்டு, தொகுப்பில் உள்ளீர்க்கப்பட்ட 21.6% சம்பள அதிகரிப்பு 2012 ஆம் ஆண்டு தொடர்பில் அனுமதிக்கப்பட்டது. அதன் பின்னர், சம்பளங்கள் 2014 ஆம் ஆண்டு வரை மாறாதிருக்கும். 2015 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து, சம்பள அதிகரிப்புகள் உண்மையான அமைப்பில் 3.5% வீதமாகவிருக்க வேண்டும் சீராக்கப்பட்டுள்ளன. அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பினதும் தலைமை அலுவலகத்திலுள்ள சம்பள ஆகுசெலவுகளை மதிப்பிடுவதில் அதே விடயம் பிரயோகிக்கப்பட்டது.

(c) அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் வாடிக்கையாளர் அதிகரிப்பு விகிதத்தை தொகுத்துள்ளதால் அதே வீதத்தில் சம்பள மற்ற இயக்கப் பராமரிப்பு (இசெ) தொடர்பில் சீராக்கல்களும் மேற்கொள்ளப்பட்டன.

(d) அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் சம்பளமற்ற மேலதிக ஆகுசெலவுகள் I (பிராந்திய தலைமை அலுவலக மேலதிக செலவு) 2010 ஆம் ஆண்டிற்காகத் தொகுக்கப்பட்ட மட்டத்தில், வரித்தீர்வை காலப்பகுதி முழுதிலும் உண்மையான அமைப்புகளில் தொடர்ந்தும் மாறாதிருக்கும் பொருட்டு சீராக்கப்பட்டுள்ளன.

(e) அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பின்னர், கடன் தீர்க்கப்படாத வாடிக்கையாளர் பங்களிப்பு ஆதன அடிப்படையிலிருந்து நீக்கப்பட்டு கணிப்பீடுகளுக்கான வருமான மாதிரியில் தனியானவொரு நிரல் விடயமாக உள்ளீர்க்கப்பட்டது.

(f) புதிய வாகனங்கள் தொடர்பான மூலதனக் கொடுப்பனவுகள், 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேற் கொள்ளப் படவிருக்கும் மூலதனச் செலவின நிகழ்சசித்திட்டத்தின் அங்கீகார நடபடிக்கை காலப்பகுதியில் ஒரு பரந்த மீளாய்வாக நிறைவு பெறாதிருந்த ஒரு இடைக்காலப் பரிகார நடவடிக்கையாக 50% வீதத்தினால் (2011 ஆம் ஆண்டு முதல்) குறைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க தேய்மான எதிர்வுகூறலும் சீராக்கப்பட்டது.

(g) சில்லறை வர்த்தக இயக்க பராமரிப்புச் செலவுகளை வாடிக்கையாளர் விகிதமாக அதே விகிதத்தில் அதிகரிக்க சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(h) வீதி ஒளியேற்றலுக்கான மின்சார விற்பனைகளிலிருந்து வரும் வருமானம் தீராத கடன்களிலிருந்து நீக்கப்பட்டது.

(ii) உரிய கடன் ஒப்பந்தங்களின் பிரதிகள் ஆணைக்குழுவைக் கொண்டு தொகுக்கப்பட வேண்டும் எனவும்,

(iii) குறைந்து செல்லும் வட்டி வீதங்களின் அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கடன் வழங்குநர்களுடன் இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் எவ்வாறு பேசித்தீர்க்கலாம் என்பது பற்றிய ஒரு கூற்று தேவைப்படுகின்றது எனவும், மற்றும்

(iv) வாடிக்கையாளர்கள் மீதான தாக்கங்களைத் தனிப்பதற்காக குறுங்காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக அல்லது பிற நிதி சார்ந்த பத்திரங்களாக மாற்றவியலச் செய்யக்கூடிய ஏதாவது நடவடிக்கை ஏற்பாடுசெய்து வழங்கப்படுதல் வேண்டும் எனவும்

அவதானிக்கின்றது.

இந்தக் குறுங்காலக் கடன்களை மீளச்செலுத்தும் பொருட்டு, வாடிக்கையாளர்கள் மீது மிகத் தெளிவாகச் சுமத்தப்படும் தனி மின்சார வாங்குநர் விநியோகிக்கும் மின்சாரத்திற்கான ஆகுசெலவு மீதான ஒரு விஷேட வரியை முன்வைத்து, அந்த வரியை தொகை மின்சார விநியோக வரித்தீர்வையில் உள்ளடக்கி, இறுதியாக இறுதிப் பயன் வாடிக்கையாளர் வரித் தீர்வையிலும் உள்ளீர்க்க ஆணைக்குழு உத்தேசிக்கின்றது. குறுங்காலக் கடன்கள் தொடர்பில் ஆணைக்குழு ஒழுங்குறுத் துகை மேற்பார்வையை உறுதிப்படுத்தி தொகை மின்சார விநியோக வரித்தீர்வைகளின் ஒவ்வொரு ஆறு மாதத் திருத்தங் களிலும் ஏதாவது மாற்றங்களிருப்பின் அந்த மாற்றங்கள் பற்றி வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கும்.

ஏதாவது வித்தியாசங்களுக்கான முழுமையானவொரு மீளறவீட்டு ஏற்பாட்டைக் கொண்டு 2011 சனவரி மாதம் முதல் யூன் வரையான காலப்பகுதிக்கு மீளறவிடப்பட வேண்டிய இந்த வரித் தொகை 2800 மில்லியன் இரு ஆக இருக்க வேண்டும் என உத்தேசிக்கப்படுகின்றது. இந்தப் பிரிவில் முன்னர் விவரிக்கப்பட்டவாறு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லையாயின், இந்த வரி மின்சாரத்தைக் கொள்வனவு செய்து விநியோகிக்கும் தனி மின்சார வாங்குநரது வரித்தீர்வைகளின் 2011 யூலை முதல் திசம்பர் வரையான அடுத்த கட்ட நிர்ணயத்தினுள் முழுமையாக நீக்கப்படும்.

### *3.3. அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆகுசெலவுகள் பகுப்பாய்வு*

அட்டவணை 09 இந்த ஆலோசனை நடபடிக்கை முடிவில், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படவிருக்கின்ற வருமானக் கொடுப்பனவுகளைக் கருத்திற்கொள்கின்ற மின்சார விநியோக ஆகுசெலவுகளின் ஒரு பகுப்பாய்வை சுட்டிக்காட்டுகின்றது.

***அட்டவணை 09 - மின்சார செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு சேவைகளின் அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவுகள் பற்றிய பகுப்பாய்வு***

| அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| | வருமான வரையறை (மில்லியன் இரு) | | | | |
| DL1 | 6,981 | 7,303 | 7,623 | 7,939 | 8,286 |
| DL2 | 7,956 | 8,318 | 8,706 | 9,073 | 9,455 |
| DL3 | 4,657 | 4,859 | 5,073 | 5,292 | 5,517 |
| DL4 | 3,776 | 3,926 | 4,056 | 4,187 | 4,318 |
| DL5 | 2,514 | 2,581 | 2,663 | 2,729 | 2,780 |
| மின்சார பகிர்ந்தளிப்பு மொத்தம் | 25,883 | 26,988 | 28,122 | 29,220 | 30,356 |
| மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு - TL | 7,288 | 7,288 | 7,288 | 7,288 | 7,288 |
| மொத்தம் | 33,172 | 34,276 | 35,411 | 36,509 | 37,645 |
| மின்சார விற்பனைகளின் எதிர்வுகூறல் (GWh) | 9,667 | 10,308 | 10,989 | 11,713 | 12,485 |
| | அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பு மூல மின்சார விற்பனைகள் (GWh) | | | | |
| DL1 | 2,704 | 2,882 | 3,071 | 3,272 | 3,486 |
| DL2 (DL5 தரப்புக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) | 3,193 | 3,403 | 3,626 | 3,863 | 4,116 |
| DL3 (DL5 தரப்புக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) | 2,115 | 2,253 | 2,401 | 2,558 | 2,726 |
| DL4 (DL5 தரப்புக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) | 1,730 | 1,843 | 1,964 | 2,093 | 2,230 |
| DL5 | 1,198 | 1,241 | 1,284 | 1,327 | 1,370 |
| மின்சார பகிர்ந்தளிப்பு மொத்தம் | 9,667 | 10,308 | 10,989 | 11,713 | 12,485 |
| TL | 10,890 | 11,546 | 12,233 | 12,974 | 13,780 |
| | சேவை ஆகுசெலவு (அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பினாலும் விற்பனை செய்யப்பட்ட (kWh/இரு) | | | | |
| DL1 | 2.58 | 2.53 | 2.48 | 2.43 | 2.38 |
| DL2 (DL5 தரப்புக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) | 2.49 | 2.44 | 2.40 | 2.35 | 2.30 |
| DL3 (DL5 தரப்புக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) | 2.20 | 2.16 | 2.11 | 2.07 | 2.02 |
| DL4 (DL5 தரப்புக்கான மின்சார விற்பனைகள் உள்ளிட்ட) | 2.18 | 2.13 | 2.06 | 2.00 | 1.94 |
| DL5 | 2.10 | 2.08 | 2.07 | 2.06 | 2.03 |
| மின்சார பகிர்ந்தளிப்பு மொத்தம் | 2.68 | 2.62 | 2.56 | 2.49 | 2.43 |
| TL | 0.67 | 0.63 | 0.60 | 0.56 | 0.53 |
| மொத்தT&D ஆகுசெலவு (விற்பனை செய்யப்பட்ட (kWh/இரு) | 3.43 | 3.33 | 3.22 | 3.12 | 3.02 |

அனுமதிக்கப்பட்ட வருமானங்களைக் கொண்டு, இலங்கையின் மொத்த மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு தொடர்பான ஆகுசெலவுகள் 2011-2015 ஐந்து ஆண்டு வரித்தீர்வை காலப்பகுதியில் உண்மையான அமைப்புகளில் குறையும் என ஆணைக்குழு அவதானிக்கின்றது. 10 ஆம் அட்டவணை 2011 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதி தொடர்பில் ஏற்புடைய ஆகுசெலவுகளின் கட்டமைப்பை விபரிக்கின்றது.

***அட்டவணை 10 - இறுதிப் பாவனையாளர்களுக்கான ஆகுசெலவுகள் தொகுப்பு (2011 சனவரி - யூன் வரை)***

| | ஒரு ஆறு மாத காலம் தொடர்பில் | அலகுகள் | பெறுமானம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|
| மின்சார முறைமை ஆகுசெலவுகள் | மொத்த DL ஆகுசெலவுகள் | மில்லியன் இரு | 12,942 | 50% ஆண்டு வருமான வரையறை |
| | TL ஆகுசெலவுகள் | மில்லியன் இரு | 3,644 | 50% ஆண்டு வருமான வரையறை |
| | தனி மின்சார வாங்குநர் கொள்திறன் ஆகுசெலவுகள் | மில்லியன் இரு | 12,551 | அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவு |
| | தனி மின்சார வாங்குநர்களின் சக்தி ஆகுசெலவுகள் | மில்லியன் இரு | 38,507 | அனுமதிக்கப்பட்ட ஆகுசெலவு |
| வரிகள் | குறுங்காலக் கடன் சேவைக்கான ஏற்பாடு | மில்லியன் இரு | 2800 | இடைக்கால மற்றும் நிபந்தனை சார் அனுமதிக்கப்பட்ட வரி |
| | புதுப்பிக்கத்தகு சக்தி - மேல்காணும் தவிர்க்கப்பட்ட ஆகுசெலவுகள் | மில்லியன் இரு | 566 | இடைக்கால மற்றும் நிபந்தனை சார் அனுமதிக்கப்பட்ட வரி |
| | மொத்தம் | மில்லியன் இரு | **71,010** | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருடாந்தப் பங்காக விளங்கும் ஆறு மாத கால மின்சார ஆறு மாத காலத்திற்கான மின்சார விற்பனைகள் | | 49.1% | |
| | மின்சார விற்பனைகள் | GWh | 4,748 | |
| | **இறுதி நுகாடவோருக்கான சராசரி விலை** | **விற்பனை செய்யப்பட்ட kWh/இரூ** | **14.95** | |

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்ட ஆகுசெலவுகளில் நேரடி மற்றும் மறைமுக அரசாங்க மானியங்களின் ஒரு மதிப்பீடு தொடர்பில், தயவு செய்து பிரிவை 04 ஐ பார்க்குக.

***அட்டவணை 11 - இறுதிப் பாவனையாளர்களின் ஆகுசெலவு இடைவெளி பற்றிய பகுப்பாய்வு***

| **ஆகுசெலவு ஆக்கக்கூறு** | **விற்பனை செய்யப்பட்ட ஆகுசெலவு/kWh** |
|---|---|
| பகிர்ந்தளிப்பு மற்றும் சில்லறை | 2.73 |
| மின்சார செலுத்துகை மற்றும் தொமிவிஇசெவி | 0.77 |
| உற்பத்திக் கொள்திறன் | 2.64 |
| உற்பத்தியாகும் சக்தி | 8.11 |
| குறுங்காலக் கடன் மீளறவீடு தொடர்பான வரி | 0.59 |
| புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பான வரி | 0.12 |
| **மொத்தம்** | **14.95** |

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்ட ஆகுசெலவுகளில் நேரடி மற்றும் மறைமுக அரசாங்க மானியங்களின் ஒரு மதிப்பீடு தொடர்பில், தயவு செய்து பிரிவை 04 ஐ பார்க்குக.

## *4. அரசாங்க மானியங்கள்*

### *4.1 பதிவழிக்கப்பட்டு மீளட்டவணைப்படுத்தப்பட்ட நீண்ட காலக் கடன்கள்*

ஆணைக்குழு, நிர்மாண காலப்பகுதியிலான வட்டி உள்ளிட்ட தொழிற்படும் மூலதனங்கள் தொடர்பில் கடன்களை வழங்கும் பொருட்டு அரசாங்கத்திற்கான தவிர்க்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் பதிவழிக்கப்பட்ட கடன்களின் பெறுமானத்தை ஒரு மதிப்பீடாக மேற்கொண்டது. இந்த மதிப்பீடுகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 12 இல் தரப்பட்டுள்ளன.

***அட்டவணை 12 – நீண்ட காலக் கடன் நிவாரணத்திற்கான அரசாங்க மானிய மதிப்பீடு***

சகல ஆகுசெலவுகளும் மில்லியன் இரூ இல் காணப்படுகின்றன

| வட்டிக் கொடுப்பனவு நிலை (நீண்ட காலக் கடன்கள்) | ஆண்டு - 2011 |
|---|---|
| லக்ஷபான | 107 |
| மகாவலி | 74 |
| ஏனைய நீர்வலு | 151 |
| அனல் சக்தி | 8,392 |
| **உப மொத்தம் (இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு)** | 8,724 |
| மின்சார செலுத்துகை (கம்பிகள்) | 3,601 |
| இமிச மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் | 4,529 |
| இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற அனைத்துத் தரப்புகளும் | **16,854** |

| மூலதன மீள்கொடுப்பனவுகள் (நீண்ட காலக் கடன்கள்) | ஆண்டு 2011 |
|---|---|
| லக்ஷபான | 69 |
| மகாவலி | 3 |
| ஏனைய நீர்வலு | 572 |
| அனல் சக்தி | 1,997 |
| **உப மொத்தம் (இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு)** | 2,641 |
| மின்சார செலுத்துகை (கம்பிகள்) | 2,297 |
| இமிச மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் | 862 |
| இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற அனைத்துத் தரப்புகளும் | **5,800** |

| | |
|---|---|
| இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு கடன் சேவை (நீண்ட காலக் கடன்கள்) | **22,654** |

### *4.2 எரிபொருள் விலைகள் மீதான சலுகைகள்*

இமிச மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்கள் ஆகிய இரண்டு தரப்புகளினதும் மின்னுற்பத்தி வசதிகளில் பயன் படுத்தப்பட்ட பின்வரும் எரிபொருட்கள் தொகுப்பு கால சலுகை விலையொன்றில் தொகுக்கப்படும் நேரத்தில் வழங்கப் படுகின்றன என ஆணைக்குழு மதிப்பிட்டுள்ளது.

(i) எரிபொருள் எண்ணெய் 180 cSt (1500 s) இமிச மற்றும் சுமிஉ ஆகிய தரப்புகளுக்கு: விலை லீற்றர்/இரூ 42.55
(ii) எரிபொருள் எண்ணெய் 380 cSt (3500 s) இமிச மற்றும் சுமிஉ ஆகிய தரப்புகளுக்கு: விலை லீற்றர்/இரூ 40.00
(iii) எரிபொருள் எண்ணெய் (குறைந்த சல்பேற்று, வெஸ்ட் கோஸ்ட் மின்பொறித் தொகுதிக்கு) :விலை லீற்றர்/இரூ 52.00

சமர்ப்பிக்கப்பட்ட விலைநிர்ணய சான்று அடிப்படையில், மின்சார உற்பத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏனைய மூன்று எரி பொருள் வகைகள் (நிலக்கரி, ஓட்டோ-டீசல் மற்றும் நப்தா ஆகியன ஏற்றியிறக்கல் ஆகுசெலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் மூலம் சீராக்கப்பட்ட சர்வதேச விலைகளை போதியளவில் அண்மித்து விலைநிர்ணயிக்கப்படுகின்றன என்பது ஆணைக்குழுவின் அபிப்பிராயமாகும்.

2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் யூன் மாதம் வரையான ஆறு மாத காலத்திற்கான எரிபொருள் மானியம் 8524 மில்லியன் இலங்கை ரூபாவாக இருக்க வேண்டும் என ஆணைக்குழு மதிப்பிடுகின்றது. தனி மின்சார வாங்குநரினால் அல்லது அந்த வாங்குநரின் எரிபொருள் விநியோகத்தரினால் (களினால்) தொகுக்கப்படும் தகவல்கள் கிடையாததால் இது ஒரு மதிப்பீடாக மாத்திரம் விளங்குகின்றது.

***அட்டவணை 13 – அரசாங்க மானியங்கள் உள்ளிட்ட ஆகுசெலவுகள் தொகுப்பு***

| | ஒரு ஆறு மாத காலம் தொடர்பில் | அலகுகள் | பெறுமானம் | விற்பனை செய்யப்பட்ட kWh ஒன்றுக்கான ஆகுசெலவு இரூ | அரசாங்க மானியம் உள்ளிட்ட ஒவ்வொரு ஆகுசெலவினதும் பங்கு | அரசாங்க மானியம் உள்ளிட்ட சராசரி விலைப் பங்கு |
|---|---|---|---|---|---|---|
| மின்சார முறைமை ஆகுசெலவுகள | அனுமதிக்கப்பட்ட மொத்த DL ஆகுசெலவுகள் | மில்லியன் இரூ | 12,942 | 2.73 | 14.1% | 18.2% |
| | TL ஆகுசெலவுகள் | மில்லியன் இரூ | 3,644 | 0.77 | 4.0% | 5.1% |
| | அனுமதிக்கப்பட்ட தனி மின்சார வாங்குநர் கொள்திறன் ஆகுசெலவுகள் | மில்லியன் இரூ | 12,551 | 2.64 | 13.8% | 17.7% |
| | அனுமதிக்கப்பட்ட தனி மின்சார வாங்குநர்களின் சக்தி ஆகுசெலவுகள் | மில்லியன் இரூ | 38,507 | 8.11 | 42.4% | 54.2% |
| வரிகள் | அனுமதிக்கப்பட்ட குறுங்காலக் கடன் சேவைக்கான ஏற்பாடு | மில்லியன் இரூ | 2800 | 0.59 | 3.1% | 3.9% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட மரீபுச - மேல்காணும் தவிர்க்கப்பட்ட ஆகுசெலவுகள் | மில்லியன் இரு | 566 | 0.12 | 0.6% | 0.8% |
| **உப மொத்தம்** | **வரித்தீர்வைகளினூடாக மீளறவிடப்பட வேண்டிய ஆகுசெலவுகள்** | மில்லியன் இரு | **71,010** | **14.95** | **78.2%** | |
| அரசாங்க மானியங்கள் | நீண்ட காலக் கடன்களிலிருந்து வரும் விடுவிப்பு | மில்லியன் இரு | 11,327 | 2.39 | 12.5% | **100.0%** |
| | எரிபொருள் விலைகள் மீதான சலுகை | மில்லியன் இரு | 8,524 | 1.80 | 9.4% | |
| | **மொத்தம்** | | **90,860** | **19.14** | **100.0%** | |
| | வருடாந்தப் பங்காக விளங்கும் ஆறு மாத கால மின்சார விற்பனைகள் | | 49.1% | | | |
| | மின்சார விற்பனைகள் | GWh | 4,748 | | | |
| | **சராசரி ஆகுசெலவு** | kWh/இரு | **19.14** | | | |

குறிப்பு: உள்ளடங்கும் காலம் 2011 சனவரி – யூன்

2011 ஆம் ஆண்டில் மின்சாரக் கைத்தொழிலின் உண்மையான ஆகுசெலவு விற்பனை செய்யப்பட்ட kWh ஒன்றுக்கு 19.14 இரு ஆக இருக்கும் என ஆணைக்குழு மதிப்பிடுகின்றது. இது (i) கடன் பதிவழிப்பும் கடன்களைக் காலந்தாழ்த்திக் கொடுப்பதற்கான சலுகையும் (ii) எரிபொருட்களின் சலுகை விலை ஆகிய விடயங்களினூடாக அரசாங்கத்தின் மூலம் 21.9% அளவினால் (kWh ஒன்றுக்கு 4.19 இரு என்ற வீதத்தில்) மானியமளிக்கப்பட்டுள்ளது.

### *4.3. மானியங்கள் அல்லது சலுகைகள் மாற்றம் பெற்றால் அது தொடர்பான நடபடிமுறை*

ஏதாவதொரு காரணத்தின் நிமித்தம் மேலே பட்டியல்படுத்தப்பட்ட அரசாங்க மானியங்கள் தனி மின்சார வாங்குநருக்கு முழுமையாகக் கிடைக்கவில்லையெனில், வரித்தீர்வைகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட பிற்-திருத்த ஏற்பாடுகள் ஏற்புடையதாக இருக்கும் என்பதுடன், அதற்கிணங்க தனி மின்சார வாங்குநருக்கு மானியமும் வழங்கப்படும். வரித்தீர்வைகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட முறையியலில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, ஏதாவது செலவுகள் வாடிக்கையாளர்களுக்குச் சுமத்தப்படும்.

அதே போன்று, மேலே குறிப்பிடப்பட்டவை தவிர ஏதாவது பிற நேரடி அல்லது மறைமுக மானியங்களை தனி மின்சார வாங்குநர் பெறுவாராயின், அத்தகைய மானியங்கள் மீளறவிடப்படும் என்பதுடன், வரித்தீர்வைகள் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட முறையியலில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தள்ளுபடியொன்றாக வாடிக்கையாளர்களுக்குச் சுமத்தவும் படும்.

## *5. வரித்தீர்வை மீள்சமநிலைப்படுத்தல் பற்றிய வழிகாட்டி*

### *5.1 அறிமுகம்*

ஒரு தொழில்நுட்ப நட்ட ஒதுக்கீட்டு முறையியலைப் பிரயோகித்து ஒவ்வொரு வகுதி வாடிக்கையாளர் மின்சார விநியோகத்திற்கான ஆகுசெலவுகள் கணிக்கப்பட்டன. இன்றைய இறுதிப் பயன் வாடிக்கையாளர் வரித்தீர்வைகள் மறு-பிரதிபலிப்பு வாய்ந்ததாக அமையவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனினும், ஒரு சில வகுதி நுகர்வோர் மானியத்தைப் பெறும் அதே நேரம், மறு-மானியத்திற்கு நிதியிடுவதற்காக ஏனைய நுகர்வோர் மிகைக் கட்டணங்களைச் செலுத்துகின்றனர். ரூ. 34,293 மில்லியன் பெறுமதியான நேரடி மற்றும் மறைமுக மானியங்கள் மின்சாரத் துறைக்கு அவசியம் எனக் கருதப்படுகின்றது. சமூகப் பொருளாதார தாத்பரியங்களைக் கருத்திற்கொண்டு குறித்த துறைக்கான மின்சார வாடிக்கையாளர்களுக்கும் முழுமொத்த மானியங்களுக்கும் இடையில் நிலவும் மறு-மானியங்களை நீக்குவதற்கு படிப்படியான ஒரு அணுகுமுறை அவசியமாகும்.

# அட்டவணை - 14 தற்போதைய வரித்தீர்வை தொடர்ந்திருக்குமாயின் 2011 ஆம் ஆண்டில் தேவைப்படுத்தப்படும் மானியங்களும் மின்சார விநியோக ஆகுசெலவுகளும்

| வாடிக்கையாளர் வகுதி | மொத்த மின்சார விற்பனை (GWh) | மொத்த ஆகுசெலவு (மில்லியன் இரு) | மொத்த வருமானம் (மில்லியன் இரு) | வாடிக்கையாளர்கள் மீதான மொத்த (மானியம்) அல்லது மிகைக்கட்டணம் (மில்லியன் இரு) | மின்சார விநியோக ஆகுசெலவு (kWh/இரு) | எதிர்வுகூறல் வருமானம் (kWh/இரு) |
|---|---|---|---|---|---|---|
| **குடும்பங்கள்** | | | | | | |
| 0-30 | 233 | 5,518 | 1,113 | (4,405) | 23.66 | 4.77 |
| 31-60 | 756 | 15,928 | 3,695 | (12,233) | 21.07 | 4.89 |
| 61-90 | 1,018 | 20,093 | 5,974 | (14,119) | 19.73 | 5.87 |
| 91-180 | 1,254 | 22,225 | 14,973 | (7,252) | 17.72 | 11.94 |
| 181-600 | 492 | 8,346 | 9,957 | 1,611 | 16.98 | 20.26 |
| >600 | 100 | 1,479 | 3,561 | 2,082 | | |
| உப மொத்தம் | 3,853 | 73,590 | 39,273 | (34,317) | 19.10 | 10.19 |
| **ஏனைய LV** | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மத ஸ்தலங்கள் | 57 | 1,004 | 513 | (491) | 17.65 | 9.02 |
| பொது நோக்கம் 1 | 1,149 | 15,809 | 23,943 | 8,134 | 13.76 | 20.83 |
| கைத்தொழில் | 238 | 3,171 | 2,611 | (561) | 13.32 | 10.96 |
| ஹோட்டல் | 1 | 19 | 20 | 1 | 15.01 | 15.73 |
| வீதி ஒளியேற்றல் | 148 | 2,292 | 3,668 | 1,376 | 15.43 | 24.70 |
| உப மொத்தம் | 1,594 | 22,295 | 30,754 | 8,460 | 13.99 | 19.29 |
| **LV தொகை** | | | | - | | |
| பொது நோக்கம் 2 | 875 | 9,751 | 18,555 | 8,803 | 11.14 | 21.20 |
| கைத்தொழில் 2 | 1,561 | 19,899 | 19,444 | (455) | 12.75 | 12.46 |
| கைத்தொழில் 2 பாகா | 174 | 2,159 | 2,343 | 184 | 12.41 | 13.47 |
| ஹோட்டல் 2 பாகா | 2 | 26 | 30 | 4 | 11.10 | 12.60 |
| ஹோட்டல் 2 (GP) | 73 | 824 | 1,169 | 345 | 11.21 | 15.91 |
| ஹோட்டல் 2 (IP) | 54 | 656 | 625 | (31) | 12.25 | 11.67 |
| உப மொத்தம் | 2,739 | 33,315 | 42,165 | 8,850 | 12.16 | 15.39 |
| **நடுத்தர மின்விசை** | | | | - | | |
| பொது நோக்கம் 3 | 223 | 2,263 | 4,378 | 2,115 | 10.13 | 19.61 |
| கைத்தொழில் 3 | 1,035 | 10,965 | 11,661 | 697 | 10.59 | 11.26 |
| கைத்தொழில் 3 பாகா | 143 | 1,376 | 1,721 | 345 | 9.64 | 12.06 |
| ஹோட்டல்கள் 3 | 8 | 77 | 83 | 6 | 9.66 | 10.44 |
| ஹோட்டல் பாகா | 71 | 629 | 725 | 95 | 8.89 | 10.24 |
| உப மொத்தம் | 1,480 | 15,310 | 18,569 | 3,259 | 10.34 | 12.55 |
| **மொத்தம்** | 9,666 | 144,510 | 130,761 | (13,749) | 14.95 | 13.53 |

ஆணைக்குழு:

(i) இந்தக் கணிப்பீட்டு ஆவணத்தின் முன்னைய பாகங்களில் விவரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பினது ஆகு செலவுகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வருமானங்கள்

(ii) நீண்ட காலக் கடன்களிலிருந்து விடுவிப்பது மற்றும் எரிபொருள் மீதான இன்றைய ஏற்புடைய சலுகை விலைகள் ஆகியன தொடர்பில் அரசாங்கத்திற்குரிய மதிப்பை அளித்தல்

(iii) மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பான குறுங் காலக் கடன்களையும் மேலதிகக் கொடுப்பனவுகளையும் மீளறவிடுவதற்கான வரிகளை அனுமதித்தல்

மீளாய்வு அடிப்படையில், தற்போதைய இறுதிப் பயன் வாடிக்கையாளர் வரித்தீர்வைகள் தொடர்ந்தும் பிரயோகிக்கப்பட்டால், 2011 ஆம் ஆண்டில் 13,749 மில்லியன் இரு வருமானப் பற்றாக்குறையொன்று காணப்படும் என ஆணைக்குழு அவதானிக் கின்றது.

பின்வரும் மூன்று முக்கியமான குறிக்கோள்களைக் கொண்டு வாடிக்கையாளர் வரித்தீர்வைகளை மீள்கட்டமைத்து இந்த 13,749 மில்லியன் இரு வருமானப் பற்றாக்குறையை (6874 மில்லியன் இரு - 2011 ஆம் ஆண்டு சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதி தொடர்பில்) அறவிடுவதற்கு ஆணைக்குழு உத்தேசிக்கின்றது.

(i) அரசாங்கத்தின் மூல ஏதாவது மேலும் மானியங்களின் உதவிகளிலிருந்து அனுமதிப் பத்திரம் பெற்ற அனைத்துத் தரப்புகளையும் நிதி ரீதியில் சுயாதீனமாக விளங்கச் செய்யும் பொருட்டு எதிர்பார்க்கப்பட்ட மொத்த வருமானத்தை 10.5% வீதத்தினால் அதிகரித்தல்

(ii) 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையிலுள்ள மின்சார விலைநிர்ணயத்தை முன்னேற்ற ரீதியில் ஆகுசெலவு-பிரதிபலிப்பு வாய்ந்ததாக நகர்த்தும் பொருட்டு ஒரு வரித்தீர்வை மீள்சமநிலைப்படுத்தல் நடபடிக்கையை ஆரம்பித்தல்

(iii) 2014 ஆம் ஆண்டில் அத்தகையதொரு விதத்தில் வாடிக்கையாளர் வரித்தீர்வைகளை மாற்றும் ஒரு நடபடிக்கையை ஆரம்பிக்கும் முகமாக அனைத்து எரிபொருள்களுக்கான ஆகுசெலவு-பிரதிபலிப்பு விலைகளையும் செலுத்தி நீண்டகாலக் கடன் கொடுப்பனவு மற்றும் வட்டி உள்ளிட்ட அனைத்து வகையான பொறுப்புக்களையும் இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் நிறைவேற்றும்.

(iv) இமிச அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு 2015 ஆம் ஆண்டளவில் இலாபம் அடையக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்தல்.

(v) தேசிய சக்திக் கொள்கை திறமுறைகள், அரசாங்கத்தின் பத்தாண்டுத் திட்டம் மற்றும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட மின்வலு சக்தி அமைச்சின் கொள்கை வழிகாட்டல்கள் ஆகியவற்றில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, குறைந்த வருமனமுடைய வாடிக்கையாளர்களுக்கு மானியம் வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்

### *5.2 வரித்தீர்வை மறுசீரமைப்புகளுக்கான வழிகாட்டி*

ஆகுசெலவு-பிரதிபலிப்பு வாய்ந்த வரித்தீர்வைகளை நோக்கி நகரும் முறையான வரித்தீர்வை மீள்சமநிலைப்படுத்தல் பற்றிய வழிகாட்டி வாடிக்கையாளர் வகுதிகளுக்கான மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகளுக்கு ஒவ்வொரு வருடமும் விலை தொடர்பான சீராக்கல்களை நிருவகித்துக் கணிப்பதற்கான மேம்பாடுகளையும் தேவைப் படுத்துகின்றது. இது ஆணைக்குழு அனுமதித்த வழிகாட்டி பற்றிய விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றது. இது, உத்தேசிக்கப்பட்ட எரிபொருள் சீராக்கல் கட்டணங்களின் நீக்கலுக்கான மேலதிகமான விடயமாகும்.

***அட்டவணை 15 - வரித்தீர்வை மீள்சமநிலைப்படுத்தல் தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வழிகாட்டி***

<table>
<tr><th>ஆண்டு</th><th>இல்லங்கள்</th><th>மத ஸ்தலங்கள்</th><th>ஏனைய சில்லறை (கைத்தொழில், பொது, ஹோட்டல்)</th><th>தொகை மின்சார நுகர்வோர்</th></tr>
<tr><td>2011</td><td>• குறை வருமானமுடைய குழுக்களுக்கான குறைந்த வரித்தீர்வைகளைத் தொடரச் செய்தல்</td><td>மாற்றங்கள் செய்யப்படலாகாது</td><td>அரசாங்கப் பாடசாலைகள், வைத்தியசாலைகள், மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் என்பவற்றுக்கான ஒரு வகுதியை அறிமுகப்படுத்துதல்</td><td>கைத்தொழில் வாடிக்கையாளர்களுக்கு பாவனை கால வரித்தீர்வைகளைக் கட்டாயப்படுத்துதல் ஏனைய நுகர்வோர் குழுக்களுக்கு சம வரித்தீர்வைகளைக் கட்டாயப்படுத்துதல்</td></tr>
<tr><td>2012</td><td>தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்</td><td>மாற்றங்கள் செய்யப்படலாகாது</td><td>வாடிக்கையாளர் வகுதிகளுக்கு இடையில் நிலவும் விலை இடைவெளியைக் குறைத்தல்</td><td>அனைத்து வகுதி தொகை மின்சார வாடிக்கையாளர்களும் ஒருவகுதியாக்கப்பட்டு பாவனை காலம் (TOU) வரித்தீர்வைகள் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்<br>மறுவியக்க சக்திக்கான ஒரு மாற்றத்தை அறிமுகப்படுத்துதல்</td></tr>
<tr><td rowspan="3">2013</td><td rowspan="3">தொகுதிகளைக் குறைத்தல்</td><td rowspan="3">மாற்றங்கள் செய்யப்படலாகாது</td><td colspan="2">எந்த மின்விசையில் மின்சார சேவை வழங்கப்படுகின்றதோ அந்த மின்விசை தவிர, வாடிக்கையாளர் வகுதிகளுக்கு இடையில் வித்தியாசம் நிலவலாகாது. ஒரு தரவுத்தளத்தைப் பேணும் நோக்கம் தொடர்பில், வாடிக்கையாளர் வகைப் படுத்தல் கணக்கீட்டு முறைமையில் பேணப்படுதல்</td></tr>
<tr><td colspan="2">கைத்தொழில், ஹோட்டல் மற்றும் பொது நோக்க வகுதி ஆகிய பிரிவுகளிலுள்ள அனைத்து சில்லறை மற்றும் தொகை மின்சார வாடிக்கையாளர்கள் தொடர்பிலும் பாவனை கால வரித்தீர்வையைக் கட்டாயப்படுத்தப்படுத்தல்</td></tr>
<tr><td colspan="2">ஏதாவது மானியங்கள், அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற தரப்பு வரித் தீர்வைக்குப் புறம்பாக அடையாளப்படுத்தப்படுதல்</td></tr>
<tr><td rowspan="3">2014</td><td>3 தொகுதிகளைத் தக்கவைத்துக் கொள்ளுதல்</td><td>மாற்றங்கள் செய்யப்படலாகாது</td><td colspan="2" rowspan="2">மேலும் மாற்றங்கள் செய்யப்படலாகாது</td></tr>
<tr><td>3-பேஸ் அனைத்து வாடிக்கையாளர்களுக்குமான பாவனை கால வரித்தீர்வை தெரிவு</td><td>மாற்றங்கள் செய்யப்படலாகாது</td></tr>
<tr><td colspan="4">இலங்கை அரசாங்கத்திற்கான (இஅ) ஆதனங்கள் மீது வரும் ஒரு புறழ்வு நீங்கலாக, கடன் சேவை உள்ளிட்ட கட்டணங்களைச் செலுத்துவதற்கும், அனைத்துப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குமான வழங்கப்பட்ட போதிய வருமான வரித்தீர்வைகள்</td></tr>
<tr><td rowspan="2">2015</td><td>தொகுதி வரித்தீர்வைகளை நீக்குதல் அனைத்து வகை வாடிக்கையாளர்களுக்கான பாகா வரித்தீர்வைகள் தெரிவு</td><td>மாற்றங்கள் செய்யப்படலாகாது</td><td colspan="2">மேலும் மாற்றங்கள் செய்யப்படலாகாது</td></tr>
<tr><td colspan="4">அனைத்து வாடிக்கையாளர்களுக்கான வரித்தீர்வைகள் முழுமையான ஆகுசெலவு பிரதிபலிப்பு வாய்ந்ததாகவிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த துறை தொடர்பான ஆதனங்கள் மீதான இஅ ஊதியங்கள் புறழ்வு</td></tr>
</table>

### *5.3 பாகா வரித்தீர்வைகள் தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட கால இடைவெளிகள்*

விவரிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு வாடிக்கையாளர் வகுதியும் 2011-2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டாய பாகா வரித்தீர்வைகளுக்கு (அல்லது கூறப்பட்ட பாவனை காலத் தெரிவு வரித்தீர்வைக்கு) நகரும் போது சகல வகுதி வாடிக்கையாளர்களுக்குமான பாவனை கால (பாகா) வரித்தீர்வை அமுலாக்கலில் பயன்படுத்தப்பட வேண்டிய பின்வரும் கால இடை வெளிகளை ஆணைக்குழு முன்மொழிகின்றது. மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பினது மின்சார வலையமைப்பின் மின்சாரப்பளுக் குறிப்பு, மற்றும் உச்சநேரமில்லா மின்சாரப்பளு காலத்தில் குறைந்த வரித்தீர்வைகளின் அனுகூலத்தை அடையும் வகையில் ஒரு மேலதிக இரவு வேலைமுறையை இயக்கும் பொருட்டு தூண்டக்கூடிய பெருமளவான வாடிக்கையாளர்களின் செயன்முறை விடயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த கால இடைவெளிகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

***அட்டவணை 16 – பாகா வரித்தீர்வையில் உத்தேசிக்கப்பட்ட இடைவெளிகள்***

| விபரம் | குறியீடு | இடைவெளி | மணித்தியாலங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பகல் | 1 | 0530 – 1830 | 13 |
| உச்சநேர மின்சாரப்பளு | 2 | 1830 – 2230 | 4 |
| உச்சநேரமற்ற மின்சாரப்பளு | 3 | 2230 – 0530 | 7 |

## *6. உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள்*

### *6.1 வீதி ஒளியேற்றல் ஆகுசெலவு*

வீதி ஒளியேற்றலுக்காகப் பயன்படுத்தப்பட்ட சக்தி தொடர்பில் செலுத்தப்படாத கட்டணங்களின் விளைவாக ஒன்றுசேருகின்ற தீராத கடன் பிரச்சினைகள் பற்றி மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் ஆணைக் குழுவுக்கு முறையிட்டன. குறித்த பிரச்சினைக்கு தகுந்த கவனத்தைச் செலுத்திய ஆணைக்குழு, வரவேண்டிய வருமானங்கள் அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் மூலம் சேகரிக்கப் படுவதை இயலச்செய்வதற்கும், இன்னும் வீதி ஒளியேற்றலிலுள்ள மின்சார வினைத்திறன் பாவனைக்கும் பின்வரும் ஒழுங்கு முறைகளை முன்மொழிகின்றது:

(i) வீதி ஒளியேற்றலில் பயன்பட்ட சக்தியின் ஆகுசெலவு, ஆகுசெலவுக் கூற்றில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டவாறு ஒரு விஷேட வரியாக மின்சார வாடிக்கையாளர்களுக்குச் சுமத்துதல்

(ii) 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 யூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதி தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வரி, மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பும் தொகுக்கும் வருமானத்தில் அல்லது வரித்தீர்வை தயாரித்தல் நடபடிக்கை காலத்தில் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விளக்கங்களில் உள்ளடக்கப்பட்ட வீதி ஒளியேற்றலுக்கான எதிர்வுகூறல் மின்சார விற்பனைகளின் ஆகுசெலவுக்குச் சமனாகவிருக்கும். மீளறவீடு அல்லது மேலதிகக் கொடுப்பனவுகள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளில்லாத இறுதியாகவிருக்கக்கூடிய சுட்டிக்காட்டப்பட்ட வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்படும் சக்தி தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட கொடுப்பனவைப் பார்க்குக.

(iii) 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து, அட்டவணை 17 இல் காட்டப்பட்ட அனுமதித்த சக்தியைக் கொண்டு வீதி ஒளியேற்றல் சக்தி மீதப்படுத்தப்படும் என்பதை மின்சார பகிர்ந்தளிப்புக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற

தரப்பு உறுதிசெய்து கொள்ளும் என்பதுடன் மிக வினைத்திறன் வாய்ந்த விதத்தில் வழங்கப்பட வேண்டிய சக்தியின் அனுமதிக்கப்பட்ட அளவை இயலச்செய்யும் பொருட்டு நிறுவப்பட வேண்டிய போதிய மாணிவாசிப்பு, மற்றும் ஏனைய கட்டுப்பாட்டுக் கண்காணிப்பு முறைமைகள் என்பவற்றையும் உறுதசெய்து கொள்ளும்.

(iv) தனியார் துறை தனியாட்களின் அல்லது நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் தனியார் அல்லது பொது வீதிகள் மற்றும் வளாகங்களுக்கு வீதி ஒளியேற்றலை நிறைவேற்றுவதற்காக ஏற்கனவேயிருக்கின்ற அல்லது புதிய ஒழுங்குகள் வீதி ஒளியேற்றல் சக்திக் கொடுப்பனவுக்காகக் கணக்கிலெடுக்கப்படாது, பிரசுரிக்கப்பட்ட வரித்தீர்வைகளில் விற்பனைகளாகக் கட்டணப்பட்டியல்படுத்தப்பட்டுக் கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(v) வாடிக்கையாளர் வரித்தீர்வைகளிலுள்ள வீதி ஒளியேற்றல் சக்தி ஆகுசெலவுகளின் உள்ளீர்ப்பானது தனியாட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு தமது விருப்பத்தில் வீதி ஒளியேற்றலுக்காக மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என கோருவதற்கு ஏதேனும் உரிமைகளை வழங்காது. நாட்டில் எந்தவிடத்திலாவது பயன்படும் வீதி ஒளியேற்றலினால் அனைத்து வாடிக்கையாளர்களும் நன்மை அடைகின்றனர் என்ற அடிப்படையில் இந்த வரி அனுமதிக்கப்படுகின்றது.

(vi) வீதி ஒளியேற்றலுக்காக வழங்கப்படுகின்ற அனுமதிக்கப்பட்ட மின்சாரம் உள்ளூர் அதிகார சபையினால் அல்லது வீதி அதிகார சபை போன்ற அத்தகைய அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட வீதி ஒளியேற்றலுக்காக மாத்திரம் இருக்க வேண்டும்.

(vii) வீதி ஒளியேற்றலுக்காக வழங்கப்படும் மின்சாரத்தை ஆணைக்குழு மறுமதிப்பீடு செய்ய இயலச்செய்யும் பொருட்டு, ஒவ்வொரு உள்ளூர் அதிகாரப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட மின்சாரம், வீதி விளக்குகளின் வகை மற்றும் எண்ணிக்கை, அவற்றின் இயக்க மணித்தியாலங்கள் என்பன தொடர்பில் உரிய உள்ளூர் அதிகார சபையினால் அல்லது ஏனைய வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற உரிய அத்தகைய சபையினால் சான்றுபடுத்தப்பட்ட ஒரு கூற்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு மின்சார பகிர்தளிப்புக்கான அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தேவைப்படுத்தப்படுகின்றன. இந்த சான்றுபடுத்தப்பட்ட கூற்றுக்கள் 2011 யூன் மாதம் தொடர்பில் அட்டவணைப்படுத்தப்படும் விஷேட வரித் தொகுப்புடன் இணைத்து ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

(viii) 2011 யூன் மாத வரித் தொகுப்பில் மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பின் மூல இந்த வரி மீளறவிடுகை தொடர்பில் அனுமதிக்கப்படும் வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்படும் சக்தி தொடர்பான வரையறை யானது மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற ஒவ்வொரு தரப்பின் மூலமும் சகல வாடிக்கையாளர்களுக்கும் 2012-2015 ஆம் ஆண்டிற்காக விற்பனை செய்யப்படும் மின்சாரத்தின் 2% வீதமாகவிருக்கும்.

***அட்டவணை 17 - 2011 ஆம் ஆண்டு தொடர்பில் வரியினூடாக அறவிடப்படவிருக்கும் வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்படுவதில் அனுமதிக்கப்பட்ட சக்தி***

| மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு | மின்சார அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு தொகுத்த எதிர்வுகூறல் மின்சார விற்பனைகள் (GWh) | | வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்பட்ட சக்திப் பங்கு (GWh) | வீதி ஒளியேற்றலுக்காக விற்பனை செய்யப்பட்ட சக்தியின் அனுமதிக்கப்பட்ட பங்கு |
|---|---|---|---|---|
| | வீதி ஒளியேற்றல் | மொத்தம் (DL5 இற்கான மின்சார விற்பனைகள் நீங்கிய DL2,3,4 மின்சார விற்பனைகள்) | | |
| DL1 | 47.0 | 2,704.0 | 1.74% | 1.74% |
| DL2 | 38.0 | 2,769.7 | 1.37% | 1.37% |
| DL3 | 14.6 | 1,771.4 | 0.82% | 0.82% |
| DL4 | 20.3 | 1,210.5 | 1.68% | 1.68% |
| DL5 | 26.0 | 1,198.0 | 2.17% | 2.00% |

### *6.2 2011 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதி தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள்*

***அட்டவணை 18 – ஏற்கனவேயிருக்கின்ற மற்றும் உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள் - 2011 சனவரிமுதல் யூன்***

## 2010 நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட ஏற்கனவேயிருக்கின்ற வரித்தீர்வைகள்

| வாடிக்கையாளர் வகுதி மற்றும் kWh (மாதாந்த) | வீதம் (இரூ/kWh) | நிலையான கட்டணம் (இரூ/மாதாந்தம்) | KVA கட்டணம் (இரூ/KVA ) | சீராக்கப்பட்ட எரிபொருள் கட்டணம் |
|---|---|---|---|---|
| குடும்பங்கள் (குறிப்பைப் பார்க்குக) | | | | |
| 0-30 | 3.00 | 30 | | 0% |
| 31-60 | 4.70 | 60 | | 0% |
| 61-90 | 7.50 | 90 | | 0% |
| 91-180 | 16.00 | 180 | | 30% |
| 181-600 | 25.00 | 240 | | 30% |
| >600 | 30.00 | 240 | | 30% |
| சமய ஸ்தலங்கள் | | | | |
| 0-30 | 2.50 | 30 | | 0% |
| 31-90 | 3.70 | 60 | | 0% |
| 91-120 | 9.00 | 180 | | 0% |
| 121-180 | 10.00 | 180 | | 0% |
| >180 | 12.50 | 240 | | 0% |
| பொது நோக்கம் –GP1 | 15.00 | 240 | | 30% |
| அரசாங்கம் –GV1 | 15.00 | 240 | | 30% |
| கைத்தொழில் –I1 | 10.50 | 240 | | 0% |
| ஹோட்டல் –H1 | 15.00 | 240 | | 30% |
| வீதி ஒளியேற்றல் | 19.00 | - | | 30% |
| தொகை மின்சாரம் | | நிலையான கட்டணம் (இரூ/மாதாந்தம்) | KVA கட்டணம் (இரூ/KVA ) | |
| பொது நோக்கம் –GP2 | 13.80 | 3000 | 750 | 30% |
| அரசாங்கம் –GV2 | 13.80 | 3000 | 750 | 30% |
| கைத்தொழில் – I2 உச்ச | 9.30 | 3000 | 675 | 0% |
| உச்சமில்லா | 9.30 | | | |
| பகல் | 9.30 | | | |
| ஹோட்டல் – H2 | 13.80 | 3000 | 750 | 30% |
| பொது நோக்கம் –GP3 | 13.60 | 3000 | 675 | 30% |
| அரசாங்கம் –GV3 | 13.60 | 3000 | 675 | 30% |
| கைத்தொழில் – I3 உச்ச | 9.10 | 3000 | 650 | 0% |
| உச்சமில்லா | 9.10 | | | |
| பகல் | 9.10 | | | |
| ஹோட்டல் – H3 | 13.60 | 3000 | 750 | 30% |

## 2011 சனவரி முதல் யூன் வரை உத்தேசிக்கப்பட்ட வரித்தீர்வைகள்

| வாடிக்கையாளர் வகுதி மற்றும் kWh (மாதாந்த) | வீதம் (இரூ/kWh ) | நிலையான கட்டணம் (இரூ/மாதாந்தம்) | KVA | சீராக்கப்பட்ட எரிபொருள் கட்டணம் |
|---|---|---|---|---|
| குடும்பங்கள் (குறிப்பைப் பார்க்குக) | | | | |
| 0-30 | 3.00 | 30 | | 0% |
| 31-60 | 4.70 | 60 | | 0% |
| 61-90 | 8.50 | 90 | | 0% |
| 91-120 | 23.50 | 300 | | 0% |
| 121-150 | 28.60 | 300 | | 0% |
| 151-180 | 32.50 | 300 | | 0% |
| 181-240 | 39.00 | 300 | | 0% |
| 241-600 | 41.75 | 300 | | 0% |
| >600 | 45.50 | 300 | | 0% |
| சமய ஸ்தலங்கள் | | | | |
| 0-30 | 2.00 | 30 | | 0% |
| 31-90 | 2.80 | 60 | | 0% |
| 91-120 | 6.80 | 180 | | 0% |
| 121-180 | 7.50 | 180 | | 0% |
| >180 | 9.50 | 240 | | 0% |
| பொது நோக்கம் –GP1 | 19.50 | 300 | | 0% |
| அரசாங்கம் –GV1 | 14.50 | 300 | | 0% |
| கைத்தொழில் –I1 | 11.50 | 300 | | 0% |
| ஹோட்டல் –H1 | 19.50 | 300 | | 0% |
| வீதி ஒளியேற்றல் | 17.00 | - | | 0% |
| தொகை மின்சாரம் | | நிலை யான | KVA | |
| பொது நோக்கம் –GP2 | 19.70 | 3000 | 1000 | 0% |
| அரசாங்கம் –GV2 | 13.30 | 3000 | 750 | 0% |
| கைத்தொழில் – I2 உச்ச | 17.00 | 3000 | 675 | 0% |
| உச்சமில்லா | 9.00 | | | 0% |
| பகல் | 12.00 | | | 0% |
| ஹோட்டல் – H2 | 19.70 | 3000 | 1000 | 0% |
| பொது நோக்கம் –GP3 | 19.35 | 3000 | 900 | 0% |
| அரசாங்கம் –GV3 | 13.00 | 3000 | 675 | 0% |
| கைத்தொழில் – I3 உச்ச | 16.50 | 3000 | 650 | 0% |
| உச்சமில்லா | 8.70 | | | 0% |
| பகல் | 11.50 | | | 0% |
| ஹோட்டல் – H3 | 19.35 | 3000 | 900 | 0% |

| டைவெளி (மணித்தியாலங்கள்) | | |
|---|---|---|
| உச்சநேர மின்சாரப்பளு: 1830 - 2230 | உச்சநேரமில்லா மின்சாரப்பளு: 2230 - 0530 | பகல்: 0530 - 1830 |

1. அதிகரித்து வரும் மாதாந்த நுகர்வுக்கான அலகுக் கட்டணம்

2. க்றீன் வரித்தீர்வைகளைத் தேவைப்படுத்தும் கைத்தொழில் வாடிக்கையாளர்களிடமிருந்து அதாவது அவர்களின் உரிய அலகு வீதத்திற்கு அதிகமான ரூ. 3.00/kwh என்ற வீதத்தில் க்றீன் வரித்தீர்வைத் தவணைக்கட்டணம் அறவிடப்படும்.

### *6.3 மாதாந்தக் கணக்குக் கூற்றுப் படிவம்*

மின்சார உற்பத்தி, மின்சார செலுத்துகை, மின்சார பகிர்ந்தளிப்பு மற்றும் மின்சார விநியோகம் ஆகியன தொடர்பான ஆகு செலவுகள் பற்றிய தகவல்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான தேவைப்பாடுகளுக்கு இணங்க, 21 மற்றும் 22 அட்டவணைகள் ஆணைக்குழுவினால் உத்தேசிக்கப்பட்ட படிவத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆணைக்குழு அனுமதிக்க வேண்டிய இந்தத் தகவல்களை உள்ளிட்டு விரிவான தகவல் படிவங்களைத் தயாரிக்குமாறு மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் தேவைப்படுத்தப்பட்டுள்ளன.

***அட்டவணை 19 – உத்தேசிக்கப்பட்ட மாதாந்தக் கணக்குக் கூற்றுப் படிவம் (LV வாடிக்கையாளர்கள்)***

**LV வாடிக்கையாளர்கள்**

உ-ம்: வீடு

| | | | | | | ரூ |
|---|---|---|---|---|---|---|
| 2010-12-27 இல் உள்ள நிலுவை | | | | | | 2,503.12 |
| தொகுதி | 0-30 | 31-60 | 61-90 | 91-180 | மொத்தம் | |
| பயன்படுத்தப்பட்ட சக்தி (kWh) | 31 | 31 | 31 | 33 | 126 | |
| வீதம் (kWh)/இரூ | 3.00 | 7.50 | 7.50 | 18.00 | | |
| சக்திக் கட்டணம் (இரூ) | 93.00 | 232.50 | 232.50 | 594.00 | 1,152.00 | |
| நிலையான கட்டணம் (இரூ) | | | | | 165.00 | |
| **2011 சனவரிக்கான மொத்தப் பட்டியல்** | | | | | | 1,317.00 |

| **2011 சனவரிக்கான பட்டியல் விபரங்கள்** | 126 | kWh | |
|---|---|---|---|
| **மின்சார ஆகுசெலவு** | kWh/இரூ | மொத்தம் (இரூ) | |
| உற்பத்தி | 8.37 | 1,054.11 | |
| மின்சார செலுத்துகை | 5.09 | 640.72 | |
| மின்சார பகிர்ந்தளிப்பு | 3.22 | 406.34 | |
| சில்லறை மின்சார சேவைகள் | | 80.00 | |
| குறுங்காலக் கடன் அறவீடு தொடர்பான வரி | 0.61 | 76.34 | |
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பான வரி | 0.13 | 16.15 | |
| | | | |
| **மொத்த மின்சார ஆகுசெலவு** | | **2,273.66** | |
| மிகைக் கட்டணம் அல்லது (மானியம்) | (7.59) | (956.66) | |
| **2011 சனவரிக்கான மொத்தக் கட்டணப் பட்டியல்** | | **1,317.00** | |
| கொடுப்பனவுகள் - 2011 சனவரி-11 | | | 2,500.00 |
| கொடுப்பனவுகள் - 2011 சனவரி-31 | | | 1,600.00 |

| **2011 பெப்ருவரிக்கான கட்டணப் பட்டியல்** | | Period | |
|---|---|---|---|
| முன்னைய மாணிவாசிப்பு | 12,304 | 27-01-2011 | |
| தற்போதைய மாணிவாசிப்பு | ***12,480*** | ***27-02-2011*** | |
| மின்சாரப் பாவனை (kWh) | ***176*** | | |
| கணக்கு சீராக்கல்கள் | | | (100.00) |
| **2011 பெப்ருவரிக்கான மொத்தக் கட்டணப் பட்டியல்** | | | ***2,217.00*** |
| **2011 பெப்ருவரி - 27 இல் உள்ள மொத்தக் கொடுமதிகள்** | | | ***1,837.12*** |

குறிப்பு: மேலே தரப்பட்ட தகவல்கள் ஒரு மாதிரி மாத்திரமே ஆகும் என்பதுடன் அந்தத் தகவல்கள் ஏதேனும் குறித்த வாடிக்கையாளருடன் சம்பந்தப்படாது.

*அட்டவணை 20 – உத்தேசிக்கப்பட்ட மாதாந்தக் கணக்குக் கூற்றுப் படிவம் (LV தொகை மின்சார மற்றும் MV வாடிக்கையாளர்கள்)*

**LV தொகை மின்சாரமும் MV வாடிக்கையாளர்களும்**

உ-ம்: LV தொகை மின்சார வாடிக்கையாளர்: கைத்தொழில் (12)

| | | | | | ரூ |
|---|---|---|---|---|---|
| 2010.12.27 இல் உள்ள நிலுவை | | | | | 250,000 |
| **2011 சனவரி கட்டணப் பட்டியல் விபரங்கள்** | நாள்<br>0530-1830 | உச்சநேர மின்சாரப்பளு<br>1830-2230 | உச்சநேரமில்லா மின்சாரப்பளு<br>2230 - 0530 | மொத்தம் | |
| சக்தி (kWh) | 12,340 | 3,400 | 5,200 | 20,940 | |
| வீதம் (kWh/இரூ) | 12.10 | 15.60 | 8.70 | | |
| சக்திக் கட்டணம் (ரூ) | 149,314 | 53,040 | 45,240 | 247,594 | |
| ஆகக்கூடிய மின்சாரத் தேவை (kVA) | | | | 90 | |
| ஆகக்கூடிய மின்சாரத் தேவைக் கட்டணம் (@ ரூ | 1000 | /kVA) | | 90,000 | |
| நிலையான கட்டணங்கள் (ரூ) | | | | 3,000 | |
| **2011 சனவரி மாதத்திற்கான மொத்த கட்டணப் பட்டியல்** | | | | | **340,594** |
| **மின்சார ஆகுசெலவு** | | kWh/ இரூ அல்லது kVA/ இரூ | மொத்தம் (ரூ) | | |
| உற்பத்தி | சக்தி | 7.42 | 153,375 | | |
| | கொள்திறன் | 421.80 | 37,962 | | |
| மின்சார செலுத்துகை | கொள்திறன் | 132.59 | 11,932 | | |
| மின்சார பகிர்ந்தளிப்பு | கொள்திறன் | 544.71 | 40,924 | | |
| சில்லறை மின்சார சேவைகள் | | | 500 | | |
| குறுங்காலக் கடன் அறவீடு தொடர்பான வரி | சக்தி | 0.54 | 11,293 | | |
| புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பான வரி | சக்தி | 0.11 | 2,389 | | |
| **மொத்த மின்சார ஆகுசெலவு** | | | **266,087** | | |
| மிகைக்கட்டணம் அல்லது (மானியம்) | | | 75 | | |
| **2011 சனவரிக்கான மொத்தக் கட்டணப் பட்டியல்** | | | **340,594** | | |
| கொடுப்பனவுகள் - 2010-01-11 | | | | | 250,000 |
| | | | | | |

| **2011 பெப்ருவரிக்கான கட்டணப் பட்டியல்** | நாள் | உச்சநேர மின்சாரப்பளு | உச்சநேரமில்லா மின்சாரப்பளு | | |
|---|---|---|---|---|---|
| முன்னைய மாணிவாசிப்பு | 134,300 | 32,670 | 67,980 | 27-01-2011 | |
| தற்போதைய மாணிவாசிப்பு | 158,670 | 38,900 | 74,890 | 27-02-2011 | |
| சக்தி (kWh) | 24,370 | 6,230 | 6,910 | 37,510 | |
| ஆகக்கூடிய மின்சாரத் தேவை ( kVA) | | | | 110 | |
| கணக்கு சீராக்கல்கள் | | | | | - 100 |
| **2011 பெப்ருவரிக்கான மொத்தக் கட்டணங்கள்** | | | | | 565,182 |
| **2011.02.27 இல் உள்ள மொத்தக் கொடுமதிகள்** | | | | | **905,676** |

குறிப்பு: மேலே தரப்பட்ட தகவல்கள் ஒரு மாதிரி மாத்திரமே ஆகும் என்பதுடன் அந்தத் தகவல்கள் ஏதேனும் குறித்த வாடிக்கையாளருடன் சம்பந்தப்படாது.

## *7. முடிவுரை*

ஆணைக்குழு, ஆகுசெலவு-பிரதிபலிப்பு வரித்தீர்வைகளில் அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளினால் மின்சாரத்திற்கு விலையிடப்படுவதை உத்தரவாதப்படுத்துவதற்கான அதன் சட்டமுறை ஆணைக்கு இணங்க, 2011 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து மேற்குறித்த வரித்தீர்வைகளைச் செயற்படுத்த உத்தேசிக்கின்றது. 2008 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி இறுதியாக வரித் தீர்வை அதிகரிக்கப் பட்டது. இந்த வரித்தீர்வை 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழுள்ள கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய ஏற்பாடுகளின் பிரகாரம் தொடர்ந்திருந்தது.

இந்த ஆலோசனை நடபடிக்கையின் இறுதியில், ஆணைக்குழு 2011 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்துவதற்காக 2010 திசம்பர் மாதத்தில் புதிய வரித்தீர்வைகள் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை எடுக்கும்.